Registered as a News Paper　பக்கங்கள்: 08　விலை ரூபா: 6-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Weekly வெள்ளி மஞ்சரி

நாதம்: 02　திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 31 (16 - 08 - 1991)　வெள்ளிக்கிழமை　ஓசை: 179

## "தகவல் வங்கி"

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் ''தகவல் வங்கி'' ஒன்றை ஆரம்பிப்பதற்கு முயற்சி செய்து வருகின்றது இத்தகவல் வங்கியை அமைப்பதற்கு யாழ். பல்கலைக்கழகம் மற்றும் யாழ் செயலக புள்ளி விபரக்கிளை ஆகியவற்றின் ஒத்துழைப்பை இந்த இணையம் பெற்றுக் கொள்ள இருக்கின்றது. மேற்படி தகவல் வங்கியில் இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பான தகவல்கள் (8ஆம் பக்கம் பார்க்க)

### நிவாரணத்தை தொடருமாறு விடுத்த

# அரச அதிபர்களின் வேண்டுகோள்

# சிறிலங்கா ஜனாதிபதியால் நிராகரிப்பு

(யாழ்ப்பாணம)

நிறுத்தப்பட்ட நிவாரண உலர் உணவு விநியோகத்தை தொடர்ந்து வழங்குமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோளை சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா நிராகரித்துள்ளார்.

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் தமது சொந்த இடங்களை விட்டு இடம் பெயர்ந்து இடம் பெயர்ந்தோர் முகாம்களுக்கு வெளியில் தங்கி இருப்பவர்களுக்கும் மற்றும் தொழில் இழந்த அல்லது பாதிக்கப்பட்டவர்களுக்கும் இதுவரை காலமும் விநியோகிக்கப்பட்டு வந்த உலர் உணவு விநியோகத்தை நிறுத்துவது என்று புனர்வாழ்வு அமைச்சு முடிவு செய்தமை தெரிந்ததே.

இதைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் மக்கள் சார்பாக உதவி அரசாங்க அதிபர்கள் மற்றும் அரசாங்க அதிபர்கள் சிறிலங்கா ஜனாதிபதியிடம் (8ஆம் பக்கம் பார்க்க)

## நிவாரண நிறுத்தம் அரசியற்கட்சிகள் கண்டனம்

(கொழும்பு)

போரினால் இடம் பெயர்ந்து அரசின் அகதி முகாம்களில் வசிக்காத சுமார் பத்து லட்சம் மக்களுக்கு நிவாரண அடிப்படையில் வழங்கப்பட்டு வந்த உலர் உணவுப் பொருள்களை அரசு நிறுத்தியுள்ளமைக்கு, தென்னிலங்கையின் பன்னிரெண்டு அரசியல் கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

### காணித் தகராறு காரணமாய்

## துண்டம் துண்டமாய் வயோதிபர் வெட்டி கொலை

(புத்தூர்)

காணித்தகராறு காரணமாக வயோதிபர் ஒருவர் கோடரியாலும் கத்தியாலும் துண்டம்துண்டமாக வெட்டிக் கொல்லப்பட்டதுடன் அவரது பிள்ளைகள் மூவர் படுகாயமுமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுக்காலை ஏழு மணியளவில் புத்தூர் மேற்கு நவக்கிரிப் பகுதியில் (8 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். செயலகம் முன்னால் மாபெரும் மறியல் போர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட அரசாங்க செயலகத்தின் முன்னால் இன்று மாபெரும் மறியல் போராட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உலர் உணவு விநியோகத்தை நிறுத்துவது என்று அரசு முடிவு செய்தமையை எதிர்த்தும் மீண்டும் உணவு விநியோகத்தை மேற்கொள்ளுமபடி கோரியும் இம் மறியல் போராட்டம் நடாத்தப் படுகின்றது.

இம்மறியல் போராட்டம் காலை முதல் மாலைவரை தொடர்ச்சியாக நடைபெறும் என்றும் இப்போராட்டத்தில் அனைத்து உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் உள்ள சமூக சேவை மற்றும் தொண்டர் ஸ்தாபனங்கள், கழகங்கள் பொதுஸ்தாபனங்கள், சங்கங்கள், தொழிற்சங்கங்கள் ஆகி (8ஆம் பக்கம் பார்க்க)

## 'இந்து'வின் செய்திக்கு சிறிலங்கா மறுப்பு

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்காக லண்டனில் கிட்டுவைச் சந்திக்கக்கூடும் என்று 'இந்து' நாளிதழ் வெளியிட்ட செய்தியை ஜனாதிபதி செயலகம் மறுத்துள்ளது.

மக்கள் மனதில் குழப்பத்தை உண்டுபண்ணும் நோக்கத்துடன விஷமத்தனமாக வெளியிடப்பட்டிருக்கும் செய்தி இதுவாகும் என்று செயலகத்தால் வெளியிடப்பட்ட அறிக் (8 ஆம் பக்கம் பார்க்க

# நிவாரண நிறுத்தத்தை எதிர்த்து முல்லையில் மாபெரும் ஆர்ப்பாட்டம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவுமாவட்டத்தில் நிவாரண நிறுத்தத்தைக் கண்டித்து மாபெரும் ஆர்பாட்ட ஊர்வலகங்கள் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்டது. பல்லாயிரக் கணக்கான மக்கள் கோஷங்களை எழுப்பிய வண்ணம் இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

புதுக்குடியிருப்பு, கற்சிலைமடு, ஒட்டுசுட்டான், நெடுங்கேணி என நான்கு பிரதேசங்களில் இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் பிரிவு பிரிவாக கலந்து கொண்டன ஒவ்வொன்றிலும் ஆயிரக்கணக்கான மக்கள் பலமைல் நீள வீதியை நிறைத்து நின்று கோஷம் எழுப்பினர்.

இந்த ஊர்வலங்களின் முடிவி முல்லைத்தீவு தலைமை (8 ஆம் பக்கம் பார்க்க)

## உணவுச் செலவீடு நாளாந்தம் 10 லட். ரூபா

(கொழும்பு)

வடக்கு கிழக்குப் பகுதியில் கடமையில் இருக்கும் சிறிலங்கா இராணுவத்தினரின் ஒரு நாளுக்குரிய உணவுக்கு மட்டும் சுமார் 10 லட்சம் ரூபா செலவாகின்றது

இராணுவத்தினரின் ஆயுத தளபாட மற்றும் ஏனைய செலவுகளைவிட உணவுக்கு மட்டும் நாளாந்தம் இவ்வளவு தொகைப் பணம் செலவு செய்யப்பட்டு வருவதால் பாதுகாப்பு அமைச்சுக்கு பெரும் நிதி நெருக்கடி தோன்றியுள்ளது (க)

### சமூகசேவை நிறுவனங்கள்

## நிவாரணத்தைத் தொடர அரசிற்கு வற்புறுத்து

[கொழும்பு]

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உலர் உணவு விநியோகத்தைத் தொடர்ந்தும் வழங்கும்படி சர்வதேச சமூக சேவை மற்றும் தொண்டர் ஸ்தாபனங்கள் பலவும் சிறிலங்கா அரசை வற்புறுத்தி வருகின்றன.

மேற்படி ஸ்தாபனங்கள். இவ்விடயம் தொடர்பாக சிறிலங்கா ஜனாதிபதி மற்றும் (8 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### திலகன், கப்டன் அருசன்

(நமது நிருபர்)

ஆனையிறவு முகாம் பகுதியில் கடந்த மாதம் பத்தாம் திகதியன்று நடந்த மோதலில் வீரவேங்கையான திலகன் (திருச்செல்வம் கஜேந்திரன் (8ஆம் பக்கம் பார்க்க)

### திருமலையில் வீட்டுவாசலில்

## குடியிருப்போர் விபரம் தொங்கவிட உத்தரவு

(திருக்கோணமலை)

திருக்கோணமலை நகர்ப் பகுதியில் வசிக்கும் சகலரும் நேற்றிலிருந்து தமது வீடுகளில் வசிப்போரின் பெயர் பட்டியலை வாசலில் தொங்கவிடவேண்டும் என சிறிலங்கா இராணுவம் உத்தரவிட்டுள்ளது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

### அகதிமுகாம்களில்

## வசதிகள் இன்றியே மக்கள் வெளியில் தங்கியுள்ளனர்

### அ சா. நி. இணையம் பிரேமாவிற்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

முகாம்களுக்கு வெளியில் வசிப்பவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த உலர் உணவு விநியோகம் நிறுத்தப்பட்டதால் 1,75,000 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 7,00,000 மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்று யாழ். மாவட்ட அரசு சார்பற்ற நிறுவனங்களின் இணையம் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்குத் தெரிவித்துள்ளது. (8 ஆம் பக்கம் பார்க்க)

# சிங்கள குடியேற்ற வாசிகளுக்கு வீட்டிற்கொரு துவக்கு

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப்புறங்களில் குடியிருத்தப்பட்ட சிங்களவர்களுக்கு தேவையான தோட்டாக்களுடன், ஒவ்வொரு வீட்டின் குடியிருப்பாளர்களுக்கும் ஒவ்வொரு துப்பாக்கியும் கொடுக்கப்பட்டுள்ளது. இதைவிட ஊர்காவல் படையினரும் தொண்டர்படை அமைப்புக்களும் எந்நேரமும் உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

மந்துரங்கல மலிந்த, கலிங்கவில, அசெல்லபுர முத்துவெல கடுகத்தமடுவ என்ற சிங்களப் பெயரிடப்பட்ட இந்தக் கிரா (8 ஆம் பக்கம் பார்க்க)

**விற்பனைக்கு**

புணலைக்காய் ¼ கிலோ பக்கற்றுகளில் விற்பனையாகின்றது. பக்கற் விலை ரூபா 25/- மட்டுமே. மில்க்வைற், யாழ்ப்பாணம். (B-2952)

## சேவைக்காலப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

தையல் பயிற்சி நிலையப் போதனா ஆசிரியர்களுக்கு சேவைக்காலப் பயிற்சி வழங்க யாழ். அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

யாழ். மாவட்டத்திற்குட்பட்ட கிராம அபிவிருத்தி இலாகாவால் நடாத்தப்படும் தையல் பயிற்சி நிலையத்தில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கே இப்பயிற்சி வழங்கப்படவுள்ளது.

1983ஆம் ஆண்டின் பின் வடக்கு கிழக்கில் இச்சேவைக் காலப்பயிற்சி நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது இவற்றை நடாத்த யாழ். அரச அதிபர் மாகாண சபையுடன் தொடர்பு கொண்டுள்ளார். (ச)

## பாலத்தின் கீழ் ஜே.வி.பியின் சடலம்

(கொழும்பு)

மொறவில என்ற இடத்தில் ஜே.வி.பி என்ற சந்தேகத்தின் பெயரில் சிறிலங்கா பொலிசாரால் கைது செய்யப்பட்ட ஒருவர் பாலம் ஒன்றின் கீழ் சடலமாக கண்டெடுக்கப்பட்டார்.

இவரது மரணம் குறித்து பொலிசார் கூறும் பொழுது ஜே.வி.பி இயக்கத்தின் ஆயுதங்கள் பதுக்கி வைத்திருக்கும் இடத்தை காட்டித் தருவதாக இவர் விசாரணையின் போது ஒப்புக்கொண்டதால் அந்த வாக்குறுதியின் பேரில் பொலிஸ் ஜீப் ஒன்றில் ஏற்றிச் செல்லப்பட்டார் என்றும் அப்படிக்கொண்டு செல்லப்படும் போது ஜீப்பிலிருந்து வெளியே இவர் பாய்ந்தார். பின்னர் பாலம் ஒன்றின் கீழ் சடலமாக காணப்பட்டார் என்றும் கூறியுள்ளனர்.

## 49·2 மில்லியன் இழப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி திணைக்களம் அண்மைய வன்செயல்களால் 49·2 மில்லியன் ரூபா பெறுமதியான சொத்துக்களை இழந்துள்ளதாக இத் திணைக்களத்தின் பிராந்திய உதவி ஆணையாளர் நடராசா தெரிவித்தார்.

இந்த இழப்புக்களை ஈடு செய்ய எந்தவித நிதி ஒதுக்கீடும் இதுவரை வழங்கபபடவில்லையென்றும் நடராசா தெரிவித்தார்.

### ஆனையிறவில் பெண்கள் காட்டிய வீரம்

# சமுதாய அழுத்தங்களை உடைத்து தேசிய படையில் இணைகின்றது

- ஜெயா

ஆனையிறவுப் போரானது தேசிய விடுதலை நோக்கிய எமது பாதையில் மட்டுமல்ல சமுதாய விடுதலை நோக்கிய பாதையில் பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.

இப்போரிலே 100 க்கு மேற்பட்ட பெண் போராளிகளை நாங்கள் இழந்திருக்கின்றோம். பலநூற்றுக்கணக்கான பெண் போராளிகள் காயமடைந்துள்ளார்கள். இவர்களது மனவுறுதியும், வீரமும் இன்று தமிழீழப் பெண்களை வழி நடத்திக்கொண்டிருக்கின்றது தங்கள்மீது விதிக்கப்பட்ட சமுதாய அழுத்தங்களை உடைத்துக்கொண்டு எமது தேசிய படையணியிலே பெண்கள் இணைந்து கொண்டிருக்கின்றனர். துணைப்படையாக இணைந்து செயற்பட வயது முதிர்ந்த பெண்கள் கூட முன் வந்து கொண்டிருக்கின்றார்கள் என மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி ஜெயா தமிழீழ மக்களுக்கு ஆற்றிய உரையில் தெரிவித்தார்.

மேலும் அவர் உலக நாடுகளிலே நடைபெற்ற எந்தவொரு விடுதலைப் போராட்டத்திலும் பார்க்க தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றிலே இத்தகைய நீண்ட நாள் போர் ஒன்றிலே பெண்கள் போதிய உணவின்றி, நீர் இன்றி, எந்தவிதமான ஆதார வசதிகளுமின்றி வானத்தைக் கூரையாக்கிக்கொண்டு சமர் புரிந்துள்ளனர். ஆண்களுக்கு இணையாக சாதனைகள் படைத்திருக்கின்றனர்.

மேலும் இந்தப் போரிலே பல்லாயிரக்கணக்கான பொது மக்கள் தங்களது பங்களிப்பை வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

துணைப்படையாக எம்மோடு தோளோடு தோள் இணைந்து நின்று போராடியிருக்கிறார்கள்.

காயப்பட்ட வீரர்களை களத்தில் இருந்து தூக்கிச் சென்று வைத்தியசாலைக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

மருத்துவர்களாக நின்று எமது தோழர்களைஉயிராபத்திலிருந்து பாதுகாத்திருக்கிறார்கள்.

குண்டுவீச்சுத் தாக்குதல்களுக்கு மத்தியிலும் உணவு கொண்டுவந்து தந்தார்கள், நீர் தந்து உயிர் காத்தார்கள்.

எங்களுக்குரிய காப்பரண்களைஅமைத்துத்தந்தார்கள்.

காயப்பட்ட வீரர்களை வைத்தியசாலையிலே கண் விழித்திருந்து பராமரித்தார்கள்.

இன்னும் என்னென்ன வழிகளில் பங்குகொள்ள முடியுமோ அந்த வகைகளில் எல்லாம் எம்மக்கள் தம் பங்களிப்பைச் செலுத்தத் தவறவில்லை.

கோயில்களில் ஆராதனைகள்கூடசெய்தார்கள். வெற்றி வேண்டி பிரார்த்தனை செய்தார்கள்.

இருந்தும் எம் மக்களின் மனங்களில் ஓர் குறை, ஆனையிறவில் புலிக்கொடி பறக்கவில்லையே என்று மக்களின் மனங்களிலே தென்படுகின்ற அந்த ஆதங்கத்தை புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

500க்கு குறையாத வீரர்களை இக் களத்திலே நாங்கள் பறிகொடுத்திருக்கின்றோம். 1500க்கு மேற்பட்ட வீரர்கள் இக்களத்திலே விழுப்புண் ஏற்றிருக்கின்றார்கள். இத்தகைய இழப்புக்கள் மத்தியிலும் நாம் பெரியதோர் சாதனையை நிகழ்த்தியிருக்கின்றோம்.

ஒன்பதினாயிரத்திற்கும் மேற்பட்ட சிறிலங்காவின் மரபுவழி இராணுவத்தை நேரெதிர்கொண்டு போராடுகின்ற அந்த மனோபலத்தைக் கொண்டதாக எமது தேசிய படையணியை உருவாக்கியிருக்கிறோம். இந்த மண்ணிலே எதிரி நிலை கொள்ள முடியாது என்ற அச்சத்தை அவனுக்கு ஏற்படுத்தியிருக்கின்றோம். எதிரியினது மனோபலத்தை உடைத்திருக்கின்றோம்.

வெட்டை வெளியிலே 24 (இருபத்துநான்கு) நாட்களுக்கு மேலாக பெரும்படையணியொன்றை நகரவிடாது தடுக்கின்ற பேராற்றலைக் கொண்ட படையணியாக நாம் வளர்ந்திருக்கின்றோம்.

உலங்கு வானூர்திகளோ, குண்டுவீச்சு விமானங்களோ தாழப்பறக்க முடியாதபடி செய்திருக்கின்றோம்.

பல கவச வாகனங்களைத் தகர்த்திருக்கின்றோம்.

'மழலைகள் பட்டாளம்' என்று முன்னாள் சிறிலங்கா அரசின் பாதுகாப்பு அமைச்சர் பரிகசித்த அந்தப் படையணிதான் இன்று பெரும் சாதனைகளை நிகழ்த்தியிருக்கின்றது.

விடுதலைப் புலிகள் வரலாற்றுச் சாதனைகளை நிகழ்த்திக்கொண்டிருக்கின்ற இக்காலகட்டத்திலே மக்கள் பெரும் படையணியாகத் திரள வேண்டும்.

ஒப்பற்ற எம் தலைவனின் வழிநடத்தலில் படை நடத்திச் சென்று வெற்றிகாண வேண்டும்.

போராட்டத்தை எமது அடுத்த சந்ததிக்கு நகர்த்தி விடாது இன்றே, எங்களுடைய காலகட்டத்திலேயே நாங்கள் விடுதலையை வென்றெடுக்க வேண்டுமாயின் எல்லோரும் தேசியப் படையணியுடன் இணைந்து கொள்ள வேண்டும். எதிரியை எம் மண்ணில் இருந்து விரட்டி ஒழித்து எமது மண்ணில் தமிழீழ தேசியக் கொடியை பறக்க விடும் நாள்வரை எம் கரங்கள் ஓயப்போவதில்லை. எம் இலட்சிய வேகம் ஓயப்போவதில்லை என்று அனைவரும் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார்.

### இந்திய இராணுவத்தால் சேதமடைந்த

## அரச சொத்துக்களுக்கு 2.5 மில்லியன் நட்டஈடு

இந்திய இராணுவத்தினரின் நடவடிக்கைகள் காரணமாக சேதமடைந்த அரச சொத்துக்களுக்கான நட்ட ஈடாக யாழ். மாவட்டத்திற்கு 2.5 மில்லியன் ரூபா பணம் கிடைக்கவுள்ளது.

1987ஆம் ஆண்டு முதல் இடம் பெற்ற இந்திய இராணுவத்தினரின் தாக்குதல் நடவடிக்கைகளால் வடக்கு கிழக்கில் உள்ள அரச சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதங்களை நிவர்த்தி செய்வதற்காக வடக்கு கிழக்கு மாகாண சபைக்கு சுமார் 20 மில்லியன் ரூபா வெளிநாட்டு உதவித் திட்டம் ஒன்றின் ஊடாக கிடைத்துள்ளது. இப்பணத்தை வடக்கு கிழக்கில் உள்ள எட்டு மாவட்டங்களுக்கும் சுமார் 2.5 மில்லியன் ரூபா வீதம் பகிர்ந்து வழங்கப்படவுள்ளது.

இவ்வாறு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் கிடைத்த பணம் அம்மாவட்டத்தில் உள்ள சகல அரச திணைக்களங்களுக்கும் பகிர்ந்து வழங்கப்படும்.

ஆனால் யாழ். மாவட்டமே இந்திய இராணுவத்தினரின் தாக்குதலால் அதிகளவில் சேதமடைந்துள்ளமையால் மேற்படி நிதிப் பங்கீடு ஏற்புடையதல்ல என்பதுடன் இந்த நிதியைப் பயன்படுத்தி சேதத்தின் ஒரு சிறு பகுதியை மட்டுமே திருத்தி அமைக்க முடியும் என்றும் யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதியினர் தெரிவித்தனர். (க)

## மரத்தால்விழுந்து படுகாயம்

பனை மரத்திலிருந்து விழுந்த இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கே. ஜீவரட்ணம் (வயது 19) என்ற இளைஞர் திங்கட்கிழமையன்று பனை மரத்தில் இருந்துவிழுந்து காயமடைந்த நிலையில் யாழ். போதனா மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (க)

## விசேட வகுப்புக்கள்

(நமது நிருபர்)

1990, 1991-ம் ஆண்டுகளுக்குரிய ஆசிரிய தராதரப்பத்திர இறுதிப் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களுக்கு பயன்படும்முகமாக விசேட வகுப்புக்கள் 18-09-91 தொடக்கம் நடைபெறவுள்ளன. இவ் வகுப்புக்களில் சேர்ந்து கொள்ள விரும்புபவர்கள் வரும் திங்கட்கிழமை (19 08 91) முற்பகல் ஒன்பது மணிக்கு முன் கலாசாலையிற் சமுகமளிக்கும்படி கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் அறிவித்துள்ளார்.

## தங்கம் கடத்தல்

(கொழும்பு)

டுபாயில் இருந்து இலங்கைக்கு அன்பளிப்புப் பார்சலில் அனுப்பிவைக்கப்பட்ட கொம்பியூட்டருக்குள்மறைத்துவைக்கப்பட்டிருந்த 10 தங்கக்கட்டிகள் சுங்கப் பகுதியினரால் கைப்பற்றப்பட்டது.

அன்பளிப்புப்பொதிக்குரியவர் உரிமைகோரியபோது கொம்பியூட்டரைச் சோதித்த சுங்க அதிகாரிகள் இக்கட்டிகளைக் கைப்பற்றினார்கள் என்றும், 19 லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### விழுதுகள் ..

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விழுந்துகொண்டேயிருந்திச்சு. நாங்கள் நிண்ட பங்கருக்க இன்னும் ரெண்டு அண்ணாமார் நிண்டவை எல்லாருமா சுட்டவை. ஆனா எங்கட சத்தம் அவங்களுக்குக் கேட்டிருக்காது. ஏனெண்டா அவங்கள் கொண்டுவந்த ஆயுதங்கள் எல்லாம் பெரிசு. அதுகளின்ர சத்தத்துக்கை இந்தச் சத்தம் ?கக்க வாய்ப்பில்லை.

முன்னுக்கு ஓடிவந்த ஒருத்தன் L.M.G ஐ வைச்சு அடிச்சான். எங்களோட நிண்ட அண்ணா ஒருத்தருக்கு தலை வெடி. மண்டை கழண்டிட்டுது. தேங்காய் உடைஞ்ச மாதிரியிருந்துது. அவற்ரை மூளை எங்களிலை சிதறிச்சுது. அவர் அப்படியே இருக்க அவற்றை றைபிளை அடுத்த ஆளிட்ட குடுத்திட்டு சூட்டியண்ணை சண்டை பிடிச்சார். நான் பாக்கேக்கை மட்டும் சூட்டி அண்ணன்ர சூட்டால் நாலு பேர் செத்தவங்கள். இன்னொருத்தன் காயப்பட்டான். அப்பகூட அவர் சொன்னார். நான் எதிர்பார்த்த சண்டை இன்னும் வரயில்லையெண்டு. அதுதான் அவர் கடைசியாகச் சொன்னது. சொல்லிமுடிய அவருக்கும் தலைவெடி. பங்கருக்கு வெளியாலவிழுந்த றைபிளை எடுக்கிறபோது சூட்டி அண்ணா சொன்னதுதான் நினைவுக்கு வந்தது.

"நான் செத்தாப் பிறகு என்ர றைபிளை நீ எடு எண்டது..."

அதற்குப் பிறகு அவனது வார்த்தைகள் வெளிவரவில்லை வார்த்தைகளில் வர முடியாதவற்றை அவனது கண்களில் இருந்து சொரிந்த கண்ணீர் சொன்னது.

வயதில் குறைந்த அந்தச் சின்னப்புலி தனது உணர்வுகளை பல கவிதைகளில் வெளிப்படுத்தியுள்ளான் அவற்றில் ஒன்று இங்கே பிரசுரமாகியுள்ளது.

இன்று சூட்டியின் ஆயுதத்தை அச்சிறு போராளி காத்துக் கொண்டிருக்கிறான். அந்தப் பணியை அவன் தொடர்வான். அவனுக்குத் தெரியும் தனது துப்பாக்கியைப் பிரிந்திருக்கும் நாட்களில் அதையெண்ணி சூட்டி கவிதையெழுதுவது வழக்கமென்று; அந்தளவுக்கு பெறுமதியான அவனுடன் கலந்துவிட்ட துப்பாக்கியின் பெறுமதியை உணர்ந்து அதனை சூட்டி விரும்பியவாறு இவன் பாதுகாப்பான். போரிடுவான்.

கூடவே சூட்டியின் நண்பர்களும், அவனால் உருவாக்கப்பட்ட போராளிகளும் போராளிகளாயுள்ள அவனது இரு உடன் பிறப்புக்களும் சூட்டியின் கனவுகளை நனவாக்க களத்தில் நிற்கின்றனர்.

## நினைவு கூருகின்றோம்...

**1991 - 08 - 16**

1984ஆம் ஆண்டு இதேதினத்தில் யாழ்ப்பாணத்தில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்

1985ஆம் ஆண்டு வவுனியாவில் சிறிலங்காப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட குழந்தைகள், சிறுவர்கள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட தமிழர்கள்

1988ஆம் ஆண்டு திருக்கோணமலையில் சிறிலங்காக் காவற்றுறையினர், மற்றும் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 3 தமிழர்கள்

1990ஆம் ஆண்டு முள்ளிப்பள்ளத்தில் சிறிலங்காப் படையினருடனான நேரடி மோதலில் வீரமரணமெய்திய **ராஜன்**

யாழ். நகரிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதல்களில் கொல்லப்பட்ட கல்வியங்காட்டைச் சேர்ந்த தமிழ் இளைஞன், மற்றும் நில அளவையாளரான தமிழ்ப் பொதுமகன்

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

**- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(B/2955)

# ஈழநாதம்

## வெள்ளி மஞ்சரி



மறவர் படைதான் தமிழ்ப்
படை - குல
மானம் ஒன்று தான் அடிப்
படை
வெறிகொள் தமிழர் புலிப்
படை - அவர்
வெல்வார் என்பது
வெளிப்படை!

- காசி ஆனந்தன்



## குழந்தை

சின்னக் குழந்தை சிரிக்கையிலே - நம்
சிந்தையெல்லாம் குளிருமடா!
வண்ண மலர்கள் போலவைகள் - அட,
மனதை மெல்ல வருடுமடா!

கொவ்வை இதழின் அழகினிலே - இந்தக்
குவலயம் தோற்றுப் போகுமடா!
மெல்ல நடந்து வருகையிலே - எந்தப்
பாழும் மனமும் கிறங்குமடா!

அம்மா அப்பா ஊடலையும் - கூடி
அணைத்து வைக்கும் செல்வமடா!
வந்த கோபம் வெடிக்கையிலே - மாறி
மறையச் செய்யும் தெய்வமடா!

வாடிச் சோர்ந்து போகையிலே – பிள்ளை
மழலைச் சொல்லைக் கேட்டிடடா!
வாட்டஞ் சோர்வு பறந்திடவே - மனம்
பாகாய் இனிக்கும் உணர்ந்திடடா!

- கண. மகேஸ்வரன்.

# விழுதுகள்

விழிப்பு, அவதானம், விரைவான செயற்பாடு, கடின உழைப்பு, அஞ்சாமை இவற்றிற்கு உதாரணம் காட்டுவதானால் குட்டியைத்தான் காட்டுவார்கள். குட்டியின் விழிப்பும் விரைவான செயற்பாடும் உன்னத தன்மை பல சமயங்களில் வரலாற்றின் போக்கை மாற்றியுள்ளது. குட்டியுடன் பழகிய போராளிகள் குட்டியிடமுள்ள இந்தத் தனித்தன்மைகளை விரைவில் மறந்துவிடமாட்டார்கள். அவனது போராட்ட வரலாற்றில் நிகழ்ந்த ஒவ்வொரு சம்பவங்களும் ஒவ்வொரு விதத்தில் அவனது திறமையை வெளிப்படுத்துவன.

கடந்த வருட இறுதியில் தென்தமிழீழப் பிரதேசங்களுக்குப் பிரதித் தலைவர் மகேந்திரராசா சென்றிருந்தார். மட்டக்களப்பிலிருந்து திரும்பி வருகையில் அவர் வந்த ஜீப்பை மட்டக்களப்பு -அம்பாறை மாவட்டத் தளபதி கருணா ஓட்டிவந்தார். காட்டுக்குள்ளிருந்து திடீரென வந்த யானை ஒன்று ஜீப்பின் குறுக்கே தும்பிக்கையை உயர்த்தியபடி நின்றது ஒருசில வினாடிகள் தாமதித்திருந்தால் அந்தத் திறந்த ஜீப்பிலிருந்த பிரதித்தலைவர் மீதோ, மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டத் தளபதி மீதோ தும்பிக்கை விழுந்திருக்கும். அதற்குள் குட்டியின் M-16 லோஞ்சர் துப்பாக்கி முழங்கியது. யானை சூட்டை வாங்கிக்கொண்டு ஓடியது. அவர்களும் காப்பாற்றப்பட்டனர் குட்டியின் துப்பாக்கிச் சூடு கேட்டதன் பின்னர்தான் யானை குறுக்கே வந்த விடயமே பின்னால் வந்தவர்களுக்குத் தெரிந்தது. எக்கணமும் துரிதமாகச் செயற்படும் இவனது ஆற்றலுக்கு இது ஒரு உதாரணம்.

அந்தப் பயணம் முழுவதும் குட்டியின் தனித்திறமைகளை ஏனைய போராளிகள் உணர்வதற்கு வாய்ப்பாக அமைந்




லெப். கேணல் குட்டி

தது. அந்தப் பயணத்தின் ஒவ்வொரு கட்டமும் பத்து மணித்தியாலத்துக்கு குறைவில்லாத நடை. முதுகில் பாரம்; தோளில் துப்பாக்கி; களைத்துப் போய்விடுவார்கள் போராளிகள். நடந்து செல்பவர்களிடையே வரிசையில் தொய்வு ஏற்பட்டுவிடும். குட்டியின் முதுகிலு பாரம்தான். அவனது கையிலும் துப்பாக்கிதான் அவனும் களைத்திருப்பான்தான். ஆனால் வேகத்தைக் குறைக்கமாட்டான். திரும்பிப் பார்த்து உற்சாகமாகச் சிரிப்பு; 203 ஐ ஒரு தடவை கொஞ்சம் மேலே யெறிந்து பிடிப்பான் மேலும் உற்சாகமாக நடந்து காட்டுவான், அதற்குப் பிறகும் மற்றவர்கள் சேர்ந்த நடை நடக்க முடியுமா? ஓடியோடி வந்து வரிசையைச் சீராக்குவார்கள். பயணம் தொடரும். சினக்காமல் கௌளாமல் மற்றவர்களை உஷார்ப்படுத்தும் இந்தத் தன்மை குட்டிக்குக் கைவந்த கலை.

இந்திய இராணுவத்தினருடனான மோதல்கள் நிகழ்ந்த காலம் இவனது கடின உழைப்பை வெளிப்படுத்திய காலமாகும். யாழ்ப்பாணத்தில் குட்டி பங்குபற்றிய மோதல்கள் இந்திய இராணுவத்துக்கு விடுதலைப் புலிகள் அழிக்க முடியாத சக்தி என்ற உண்மையைப்புலப்படுத்தின. வன்னிக் காடுகளிலும் அந்த உண்மையை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டான் குட்டி. ஒப்பறேசன் பவான், ஒப்பறேசன் புயல்... இப்படியாக இன்னோரன்ன பெயரில் இந்தியப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகள் எல்லாவற்றையும் முறியடித்து தமிழரின் வீரத்தை உலகிற்கு உணர்த்தியவர்களுள் குட்டியும் ஒருவன்.

அந்தக்காட்டில் இரவு- பகல் என்ற பேதம் இடையாது. எந்த நேரமும் குட்டி வேலை செய்து கொண்டிருப்பான். இவன் ஓய்வெடுக்கும் நேரம் குறைவு என இவனுடன் பழகிய போராளிகள் கண்களை விரித்தபடியே கூறுகின்றனர். ஒரு சமயம் போராளிகளுக்கான பதுங்கு குழிகளை அமைக்கும் பணி கொடுக்கப்பட்டது. குட்டி வெட்டிக் கொண்டே போனான். கருங்கற் பாறைகள் வந்து விட்டன. கருங்கல் என்று இவன் சலிக்கவில்லை. இதைப்பற்றி ஒரு போராளி கூறுகையில் "நாங்கள் எல்லாம் கெதியாக களைச்சுப் போடுவம். இவன்தொடர்ந்து வேலை செய்வான். கல்லில் வேலை செய்வது எவ்வளவு கஷ்டம்? சிற்பவேலை செய்யிறது மாதிரித்தான்; ஆனா இவன் சலிக்காமல் அடிப்பான். கொஞ்சம் நித்திரை வந்தா லும் விரல்லை சுத்தியலிட்டா விரல் முடிஞ்சுது. அவ்வளவு ஆழத்துக்கு கட்டாக கருங்கல்லில் பதுங்குகுழி வெட்ட முடிஞ்சதெண்டா அது குட்டியின்ர கடும் உழைப்பாலதான்" என்றான்.

அந்தப் போராளி மேலும் கூறுகையில் 'ஒருதரம் மணலாறுக்கு கொஞ்சப்பேர் போய்க்கொண்டிருந்தனாங்கள். பாலமோட்டைக் காட்டில போய்க் கொண்டிருக்கேக்கை காட்டுக்குள்ள இந்திய இராணுவம் நிக்கிறமாதிரி அறிகுறி தெரிஞ்சுது. பிறகு ஆமி எங்களை நோக்கி அடிச்சுக் கொண்டிருந்தாங்கள். திடீரென இவனைக் கண்ட ஆமி திகைச்சுப்போய் நிண்டாங்கள். குட்டி G3 ஆல சுட்டான் சில ஆமி விழுந்தாங்கள். மிச்சப்பேர் சுட்டாங்கள். தப்பி வாறபோது மற்றப் பொடியங்கள் காட்டுக்குள்ள வழிமாறிப் போயிட்டாங்கள். குட்டி தனியக் காட்டுக்குள்ள குட்டி முடிஞ்சுபோனான் எண்டுதான் கதை. இவன் ரெண்டு மூண்டு நாளா காட்டுக்குள்ளை அலைஞ்சு திரிஞ்சான். போறபோது வழக்கமாய்க் கொண்டுபோன




குட்டியின் சிந்தனையில் உதித்த கருத்தோவியம் இது. இந்தியப் படையினர் இந்த மண்ணில நிலை கொண்டிருந்தபோது இருந்த நிலையைச் சித்திரிக்கின்றது இப்படம்.

நன்றி - உணர்வு

தெரிஞ்சது மற்றவை எல்லாரையும் அனுப்பிப் போட்டு குட்டி தன்னோட ஒண்டிரண்டு பேரைமட்டும் கூட்டிக்கொண்டு காட்டுக்குள்ளை போனான். வழக்கம்போல அவன்தான் முன்னுக்குப் போனான். வளைவுக்குள்ளால திரும்பினபோது தான் எதிரே இந்தியன் ஆமி; அண்டைக்குத்தான் அந்த இடத்துக்கு வந்த இந்தியன் ஆமி அங்க புதுசா காம்ப் போட்டு இருந்தது. அதையும் சாப்பிட்டு, யானை உழக்கின பள்ளங்களில இருந்த தண்ணியைக் குடிச்சுக் கொண்டு திரிஞ்சு, பிறகுதான் எங்கட முகாமுக்கு வந்து சேர்ந்தான். இப்பிடி காட்டுக்குள்ள இருந்த போது முதல்ல படுக்கிற துக்காக முதல்ல இருந்த பையைக் கழட்டி வெட்சிறை உதறினா வெட்சிற் முழுக்க

(6 ஆம் பக்கம் பார்க்க)

# மானம் காக்க...

## சிறுகதை

முற்றத்தில் ஓங்கிவளர்ந்து நின்ற வேப்ப மரத்து இலைகள் கொட்டியிருந்தது. அந்த மணல் நிலத்தில் கூட்டுவது பெரிய வேலையாக இருந்தது. பொன்னாயி குனிந்த குனிவில் கூட்டிக்கொண்டு நின்றாள். அவளது எண்ணமெல்லாம் கறுத்தாரைப் பற்றியதாகவே இருந்தது. அவள் கறுத்தாரைக்கட்டி மூன்று மாதங்கள் கூட சரியாக முடியவில்லை. தளகத்தரின் வளர்ப்புப் பிள்ளையான கறுத்தார் முறுக்கேறிய குட்டியானை. ஊரார் கறுப்பு யானை என்று கூப்பிடும் அளவிற்கு யானைதான்.

தளகத்தர் வீரவேலாலிசியின் குடும்ப வாரிசு. கோயில் வயல் குறுநில பிரதேச தலைவியாக ஆட்சிபுரிந்த கடையனாச்சி தன் மண் அடிமையாவது விரும்பாது கோயில் முகப்பில் உயிர்விட்டதை இப்பவும் அந்தக் கிராமத்தில் பெருமையாகப் பேசுவார்கள். தளகத்தர் கடையனாச்சியின் வழித்தோன்றல் என்று எப்பவும் பேசுவது உண்மை. உண்மையில் தன் மண்ணிலும் மக்களிலும் ஒர் தணியாத பற்று உண்டு.

குஞ்சிபாமுனைப் பகுதியில் ஒரு தலைவியாகவே தளகத்தார் இருந்தார். அவருடைய வீட்டு வாசலில் குவிந்து கிடக்கும் தட்டுவம் ஒரு பெரிய சத்திரத்தின் நினைவையே கொடுக்கும்.

வேப்பம் சருகைக் கூட்டிக் கொண்டிருந்த பொன்னாயி அந்தத் தட்டுவக் குவியலைப் பார்க்கிறாள். தளகத்தர் எவ்வளவு நல்லவர். அவர் வீட்டில் தினமும் அள்ளி அள்ளிக் கொடுக்கிறாரே. அவருடைய மனதில் என்ன இருக்கு. குலப் பெருமையைக் காக்கவா, மண் மீதுகொண்ட பற்றா, இப்படிப் பட்டவரா என் கறுத்தாரை ஏன் என் குலக்கொழுந்தாக நினைக்கும்... அவளது கண்களில் இருந்து ஒரு துளி பட்டென்று கைகளில் பட்டது. அவள் கடலைப் பார்க்கிறாள். பெருமூச்சு மட்டும் வருகிறது.



தளகத்தரின் பிரதேசத்தில் இருந்து வளமான பனைகளை ஒரு டச்சுக்காரன் தறித்து அந்த இடத்தில் சவுக்கம் தோட்டம் ஒன்றை உருவாக்கிக் கொண்டிருந்தான். இயக்கச்சிச் சந்திக்கருகாமையில் அவன் உருவாக்கிய தோட்டம் உண்மையில் இப்பிரதேச சுரண்டலின் ஆரம்ப நடவடிக்கைதான்.

கூர்மையான தளகத்தரின் அறிவுக்கு இது நல்லாகத் தைத்து விட்டது.

ஆனையிறவு உப்பளப்பகுதியில் ஆதிக்கம் கொண்டு வந்த டச்சுக் கொம்பனி இயக்கச்சியை தளமாக்கப் போகிறார்கள். இவர்களை இங்கே விட்டால் எங்கள் பெண்கள் மானத்தோடு வாழ முடியாது எனச் சிந்தித்த தளகத்தர் எப்படியாவது டச்சுக் காரரை தன் மண்ணில் இருந்து விரட்டி விட திட்டம் தீட்டினார்.

பொன்னாயி மீண்டும் தெருவைப் பார்க்கிறாள். கறுத்தார் ஏன் இன்னும் வரவில்லை அவளுடைய சிந்தனை ஏதோ ஒரு இனம் புரியாத கலவரத்தில் சிக்கித் தவிக்கிறது.

அன்று தளகத்தர் கறுத்தாரை என்றும் இல்லாதவாறு வாஞ்சையோடு கட்டியணைத்து எனக்குப் பிள்ளைகள் இல்லையென்று நான் என்றும் கவலைப்பட்டது கிடையாது. நானும் தங்கணாச்சியும் உன்னை என்று அந்த மண்டலாய் வயிரவர் கோயிலில் பிள்ளையாக ஏற்றோமோ அன்றே ஒரு விரதத்தை எடுத்துக் கொண்டோம். எங்கள் இளமையுணர்வுகளை தியாகம் செய்வதென்றும், நீ தான் எங்கள் ஒரே வாரிசாக வளர வேண்டும் என்பதும், பாசம், சொத்து, பற்று எல்லாம் உன்னைத்தவிர வேறு யாருக்கும் போகக்கூடாது.

பற்று. கடைசிவரை மண்ணைக் காத்தவர்கள் நாங்கள். வஞ்சகம், சூழ்ச்சி, காட்டிக் கொடுப்பு என மண்ணின் இறைமையை இழக்கச் செய்தாலும் இந்தக் கடையனாச்சியின் மண்ணில் டச்சுக்காரரை வேரூன்ற விடக்கூடாது. இதை நாங்கள் தான் செய்து முடிக்க வேண்டும்.

இன்று அமாவாசை இருட்டு. முழுத்தோட்டமும் அழிக்கப்பட வேண்டும். அவர்களின் காவல் கொட்டில்கள் எரிக்கப்பட வேண்டும். எதற்கும் நிதானம், அவதானம் மிக முக்கியம். அவர்களிடம் துவக்குகளும் உண்டு என்றார் தளகத்தார்.

தங்கணாச்சியால் நிற்கமுடியவில்லை. அந்த ஓரக்குந்தில் இருப்பதை தளகத்தார் கண்டார்.

'நீ எப்ப வந்தனி?'

'நான் வெள்ளன வந்திட்டன்.'

'தங்கணாச்சி இது உனக்கு இப்ப விளங்காது. காலப் போக்கிலதான் தெரியும். அவங்கள நாங்கள் இங்க தங்க வைத்தால் எங்கள் மானம் மரியாதை எல்லாம் போய் விடும். அதைவிட இந்த உயிர் போகலாம்.

அதற்கு என்ர பிள்ளைதான் கிடைச்சானா?

அப்படியானால் நான்போகிறன்.

'இல்லை. இதை நான்தான் முடிக்க வேண்டும். எனக்காக எத்தனை தியாகத்தை இன்று வரை செய்தீர்கள். அதைவிட இந்த மண் எங்களின்சொந்த மண். இந்தமண்ணின் மானம் எனது மானம். இதை நான் செய்து முடிப்பேன்.' கறுத்தாரின் நெஞ்சு நிமிர்கிறது.

கடலைப் பார்த்துநின்ற பொன்னாயி அம்மா அது அது வருகுது. துள்ளிக்கொண்டு வட்டக் குடிலுக்குள் ஓடுவாள். அந்த வீரனுக்கு விருப்பமான ஒடியல் பிட்டும் பழைய மீன் குழம்பும் அதுதான் அவள் கண்ட உலகம்.

தளகத்தார் அன்று தொடங்கிவைத்தது இன்னும் முடியவில்லை. ஆனால் முடியும் நாள் நெருங்கிக்கொண்டிருக்கிறது.

### அ. முருகேசு

புதுக்குடியிருப்பு

தங்கணாச்சி ஒரு கோட்டடவில் நிறையப்பாலுடன் வந்தவள் நிலை கலங்கி தளகத்தரையும், கறுத்தாரையும் பார்த்தாள். தளகத்தரின் உறுதியும் நினைத்ததை முடிக்கும் செயலும் தங்கணாச்சிக்கு நல்லாகத் தெரியும். சவுக்கம் தோட்ட விவகாரத்தில் தளகத்தர் ஈடுபட்டிருப்பதும் அதை முடிக்க கறுத்தாரைப் பயன்படுத்தப் போகிறார் என்பதையும் உணர்ந்த தங்கணாச்சி கலங்கிப் போனாள்.

தமது இளமை ஆசையெல்லாம் பலி கொடுத்து கட்டி வளர்த்த கறுத்தாரை பலி கொடுக்கும் அளவுக்கு துணிந்த தளகத்தரை எண்ணும் போது அருவருப்பாக இருந்தது.

தளகத்தார் தம்பி இது எங்கட மானப்பிரச்சினை இவங்களை எங்கட நாட்டில் தங்கவிட்டால் நாளைக்கு இந்த மண்ணில மக்கள் நிம்மதியாக வாழ முடியாது: எப்படியாவது அவர்களின் திட்டங்களை நாங்கள் குலைக்கவேணும். சவுக்குத் தோட்டம் முற்றாக அழிக்கப்பட வேணும். இங்கு அவங்கள் தங்கி தொழில்புரிவது நடக்கக்கூடாது. நடக்க விடவும் கூடாது. நல்லாகப் புரிந்துகொள் நாங்கள்வாழும் இந்த மண் ஒரு அடிமைப்

## அமெரிக்காவின் அதிநவீன M-1A1 டாங்கிகள்

அமெரிக்காவின் அதிநவீன M-1A1 டாங்கிகள் மேலும் நவீனமாக மாற்றப்படப் போகின்றன. வளைகுடாப் போரில் மிகமுக்கிய பங்கு வகித்த இவை சில பிரதிகூலங்களைக் கொண்டிருப்பதாக பென்ரகன் அதிகாரிகள் தெரிவித்ததை தொடர்ந்து, இவற்றை வாங்க அமெரிக்க அரசாங்கம் தயங்கியது. இதனது பெரிய உருவம் எதிரி விமானங்களின் பார்வைக்கு சுலபமாக இருந்ததும், இவற்றால் வெளியிடப் படும் வெப்பம், பாவிக்கப்படும் உலோகம் என்பனவற்றால் செந்நிற கீழ் கதிர் (Infrared) மற்றும் காந்தப்புல டாங்கி எதிர்ப்பு ஏவுகணைகளின் தாக்குதல்களுக்குச் சுலபமாக உள்ளாக்கப்படும் என்பதும் முக்கிய குறைபாடுகளாகச் சுட்டிக்காட்டப்பட்டன.

புதிய M-1A2 ரக டாங்கிகள், புதியவகை உலோகம் மற்றும் மட்பாண்ட (Ceramic) பொருள் கொண்டும் பழைய டாங்கிகளைப் போல் அரைப்பங்கு அளவினதாகவும் அமைக்கப்பட இருக்கின்றன. இவற்றில் பாவிக்கப்படும் பீரங்கிகள் முன்னைய வற்றைப் போல் இரு மடங்கு வேகத்திற் செல்லக் கூடியதாகவும் அமைக்கப்படும்.

M-1 ரக டாங்கிகளைத் தயாரிக்கும் நிறுவனமாகிய "லிமா" போதிய விற்பனை இல்லாமையால் மூடப்பட இருந்தது. ஆனால் புதிய தயாரிப்பினால் 1995 வரை தொடர்ந்து இயங்க முடியும். இங்கு சுமார் 2,300 தொழிலாளர்கள் தொழில் புரிகிறார்கள். இங்கு தொழில் புரியும் ஒரு ஒட்டுனரின் (Welder) வருமானம் மணித்தியாலத்திற்கு 15.84 டொலராகும்.



கவிதை

## முடிந்த முடிவாகும் முன்வருவீர்!

அடிபணி யாது உயிர்விடும் படியே
அனைவரும் நஞ்சணி அணிகின்றார்
படைபல வரினும் புறமுது கிடாத
பலத்துடன் போர்செயத் துணிகின்றார்.

கடைசி வரையுமொரு போராளி யாயினும்
வீடிவு காணும்வரை போர்புரிவான்
முடிவு தமிழீழப் படியைக் கடவாது
முடிந்த முடிவாகும் முன்வருவீர்!

விடுதலைப் புலிகளைத் திடமுறச் செய்திட
வீர முழக்கம்செயும் விழிப்புளரே
பொடியளைப் போருக்கு அனுப்பிடும்
-பெற்றோரைப்
போற்றியே வாழ்த்துக்கள் புரிவீரே!

சோமன் சூரியன் அக்கினி என்றே
சொல்லும் 'பிரபா கரன்நாமம்'
ஓமோம் தமிழீழ விடுதலை நாயகம்
உச்சிமா மலையென ஓதிடுவோம்!

சந்திர சூரியன் அக்கினி மூன்றையும்
சாந்தவோர் நாமமே 'பிரபாகரன்'
சுந்தா நாமமெய் தம்பிபிரபாகரன்
சுதந்திர தமிழீழச் சுடர்விழியே!

கவிஞர் அரியாலையூர் வே. ஜயாத்துரை

பிரபாகரன் - சோமன்: சூரியன்: அக்கினி

\- பகுதி - 2 -

பெரஸ்ரொய்காவின் மூலம் சோவியத்தின் உள்நாட்டு வெளி நாட்டுக்கொள்கையில் பெரும்மாற்றம் ஏற்பட்டது. ஆப்கானிஸ்தானில் இருந்து படையை சோவியத் முற்றாக வாபஸ் வாங்கியது கிழக்கைரோப்பிய நாடுகளிலுள்ள தனது படைகளை படிப்படியாக திருப்பி அழைக்கும் முடிவுக்கு வந்தது. தனது நேரடித்தயவில் வாழும் அரசுகளை கைவிட்டது. (உ-ம் நிக்கரகுவா) மற்றும் தன்னுடன் நெருக்கமாகப் பிணைந்திருந்த அரசுகளை கதியற்ற நிலையில் விட்டது. வார்சோவின் இராணுவக்கூட்டு கலைக்கப்பட்டது. சோவியத் யூனியன் நேட்டோவிற் சேர விருப்பம் தெரிவித்தது. இந்த வகையில் ஓர் அணி குலைந்ததும் அதனை நம்பி நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அணியாக இருந்த அரசுகள் தமக்கென ஒரு புதிய நிலையைத் தேடிக்கொள்ள வேண்டி ஏற்பட்டது. அதே வேளை வார்சோ இராணுவக் கூட்டுக் குலைந்ததும் ஐரோப்பாவில் நேட்டோ அணியின் இராணுவ கொள்கையிலும் தந்திரோபாயத்திலும் மற்றும் வேறு தேவைகளிலும் மாற்றங்கள் வேண்டி இருந்தது. இந்த நிலையில் முழு உலகிலுமே ஓர் அரசியற் குலைவு ஏற்பட்டது.

இவ்வரசியல் மாற்றத்துக்கு முதல் பொருளாதார துறையில் பெரும் மாற்றம் ஏற்பட்டு அது வளரத் தொடங்கியது. தகவல் அடிப்படைப் பொருளாதாரம் (Information-Based Economy) உருப்பெறத் தொடங்கியது நடைமுறையில் இருந்துவந்த கைத்தொழிற் சமூகம் (Industrial Society) தகவல் சமூகமாக (Information Society) மாறத்தொடங்கியது. கொம்பியூட்டர், தகவல், தொழில் நுட்பம், இயந்திர மனிதன், (Computers, Information, Technology and Robotics) என்பனவற்றை அடிப்படையாகக்கொண்டு புதியபொருளாதார சமூகம் தோன்றியது.

இத்தகைய மாற்றங்களால் தொழிலாளர் வர்க்கம் மத்திய தரவர்க்கத்தால் பிரதியீடு செய்யப்படும் நிலை உருவாகியது.

இத்தகைய மாற்றங்கள் ஏற்பட்டபோதிலும் உற்பத்தி முறையில் (Mode of production) மாற்றம் ஏற்படவில்லை. உற்பத்தித் தன்மையில் (Method of production) மாற்றம் ஏற்பட்டுள்ளது. இது உற்பத்தித் தன்மையில் ஏற்பட்டுள்ள பண்புரீதியான மாற்றமாகும். இந்தப்பொருளாதார மாற்றமானது பழைய முறையிலிருந்து புதிய முறைக்கான ஓர் இடைமாறு காலமாகும்.

இந்த அமைப்பின் உயிருள்ள உழைப்பிற்குப் பதிலாக (Living-Labour) தேக்கப்பட்ட அல்லது உயிரற்ற உழைப்பு (Dead Labour) பெரிதும் விரிவடையும். உற்பத்தியில் நெகிழ்வுத்தன்மை (Flexibility) ஏற்படுகின்றது, உற்பத்தி உலகமயத்தன்மை (Globalization of Production) அடைகிறது; பொருளாதார அர்த்தத்தில் தேசிய எல்லைகள் மேலும் மேலும் கரைந்து வருகின்றன. உற்பத்தியிலும் பொருளாதாரத்திலும் ஏற்பட்டுவரும் உலகமயத் தன்மையை விளக்கிக்கொள்ள சற்று பின் நோக்கி செல்வோம். இற்றைக்கு நான்கு அல்லது ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன்பு பொருளாதார ரீதியில் ஒரு கிராமம் தனித்து நின்று உயிர் வாழ முடிந்தது. இந்நிலை மாறி உற்பத்தித் தேசியத் தன்மை அடையவே தேசிய எல்லைக்குள் நின்று உயிர் வாழ்வது சாத்தியமாகி இருந்தது. பின்பு பொருளாதார உறவு படிப்படியாக தேசிய எல்லைகளையும் கடந்து சர்வதேசத் தன்மைபெறத்தொடங்கியது. இவ்வாறாக உற்பத்தியும் கிராமத்தன்மையிலிருந்து விரிவடைந்து தேசியத் தன்மையாகி இன்று உலகமயத்தன்மையைப் பெறுகின்றது.

## புதிய சர்வதேச அரசியல் ஒழுங்கு

இன்று ஒரு பொருளின் உற்பத்தியானது ஒரு நாட்டின் எல்லையை தாண்டியதாக மாறி வருகின்றது உதாரணமாக மிட்சுபிசி கொம்பனி தயாரிக்கும் 'லான்சர்' கார் தாய்லாந்தில் வைத்துபொருத்தப்படுகின்றது. ஆனால் அந்தக் காருக்கான பாகங்கள் தனித்தனியே இந்தோனேசியா மலேசியா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளிற் தயாரிக்கப்படுகிறது. இந்தக் கார் இறுதிவடிவம் பெறுவதில் இவ்வாறு பல நாடுகள் சம்பந்தப்படுகின்றன. பல்தேசியக்கொம்பனிகள் இன்று சக்திவாய்ந்த நிறுவனங்களாக உள்ளன தனித்தனியே உலகிலுள்ள 80 நாடுகளினது தேசிய வருமானத்தைவிட தனித்தனியே 20 பல்தேசியக் கொம்பனிகளினதும் வருமானம் அதிகமாகும். அடுத்து தேசிய எல்லை கடந்த வங்கிகள் (Transnational Banks) பெரிதும் ஆதிக்கம் உள்ளனவாக வளர்ந்து வருகின்றன. இத்தகைய பொருளாதாரப் போக்கு ஆதிக்கம் பெறும்போது அதற்குப்பலியாகப் போவது மூன்றாம் உலகமாகும். இவ்வாறாக மாறியும் வளர்ந்தும் வரும் உலகப் பொருளாதாரப் போக்கிற்குஏற்பவே சர்வதேச அரசியல்உறவும் அமையும்,

சர்வதேச சமூகம் என்னும் பரந்த அமைப்புக்குள் நாடு, தேசிய இனம் குடும்பம், என்னும் எல்லைகள் உப அங்கங்களாக உள்ளன. இந்த வகையில் சர்வதேச சமூகம் என்னும் பண்பு நவீன வரலாற்றில் வளர்ச்சியடைந்து கொண்டு வருகிறது. ஒன்றுடன் ஒன்று இணைந்த, ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரித்துப் பார்க்க முடியாத, பல்வேறு அலகுகளின் கூட்டுத் தொகுப்பே சமூகம் என்பதன் உள்ளடக்கமாகும் இவ்வாறுதான் சர்வதேச சமூகம் என்பதும் வளர்ந்து வருகிறது.

விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சியும், பரிவர்த்தனையும், பொருளாதாரத்தொடர்பு அரசியல் தொடர்பு, போக்குவரத்து தொடர்பு தொலைத்தொடர்பு, வெகுஜனத் தொடர்புச் சாதனரீதியான தொடர்பு, கலாசாரப் பரிவர்த்தனை, இயற்கைப் சூழல் பாதுகாப்பு போன்ற பல வேறு அம்சங்களினால் உலகின் பல்வேறு பகுதிகளும் ஒன்றுடன் ஒன்று இறுக்கமாக பின்னிப்பிணைக்கப் பட்டுள்ளன, பொருளாதார அர்த்தத்தில் தேசிய எல்லைகள் என்பன மிகக் கணிசமான அளவு கரைந்துள்ளன. இவ்வாறு சர்வதேச சமூக அமைப்புக்குள் மனிதன் உட்பட்டுள்ள போதிலும் தேசிய எல்லைகளைத் தளமாகக் கொண்டே இன்றைய மனித வாழ்வு அமைந்துள்ளது.

பொருளாதார அர்த்தத்தில் மட்டுமன்றி ஏனைய வகைகளிலும் தேசிய எல்லைகள் கரைந்து வருகின்ற போதிலும் தேச எல்லைக்குள் வாழ்கின்ற மக்களின் நலனுக்கு அரசு பொறுப்பேற்கின்றது. ஆதலினால் அரசு என்னும் நிறுவனம் உலகின் சூழலுக்கு ஏற்ப மக்களின் நலன்களையும் பாதுகாப்பினையும்எவ்வாறுபேணுவது, வளர்ப்பது என பதில் அக்கறை செலுத்துகின்றது. காணப்படும் சர்வதேச நிலைகளுக்கேற்ப உலகின் பல்வேறு பகுதிகளுடனான தொடர்பை பயன்படுத்தி மக்களின் உயர்ந்த பட்சநலனை அடைவதற்கான வழி என்ன என்பதை கண்டறிந்து நடைமுறைப்படுத்தும் துறையாக சர்வதேச உறவு அமைகின்றது.

எனவே ஒருபுறம் சர்வதேச சமூக அமைப்பு மறுபுறம் தேசிய தளவாழ்வு ஆகிய இரண்டுக்கும் இடையிலான வாழ்நிலையை அடையாளம் காண்பதே சர்வதேச உறவு என்பதன் அடிப்படைத் தாற்பரியமாகும், (தொடரும்)

மாவீரர் கப்டன் ஹீரோராஜின் நினைவாக திரு. மு. திருநாவுக்கரசு அவர்கள் வெளியிட்ட "புதிய சர்வதேச அரசியல் ஒழுங்கு" என்னும் நூலின் முதல் பகுதி சென்ற வார வெள்ளி மஞ்சரியில் வெளியாகியது. இரண்டாம் பகுதி இவ்விதழில் பிரசுரமாகிறது. இதன் அடுத்த பகுதி அடுத்த வாரம் வெளியாகும்.

---

# போரினால் பாதிப்படையும் மக்களுக்கு உளவளத்துணையே பொருத்தமான பராமரிப்பாகும்

வைத்திய கலாநிதி டி. சோமசுந்தரம் எம். டி. யாழ். போதனா வைத்தியசாலையில் உளவள மருத்துவஆலோசகராகப் (Consultant Psychyatrist) பணியாற்றுகிறார். இன்றைய தமிழர் சூழலில் காணப்படும் பிரச்சினைகளை பிரக்ஞையுடன் இந்தப் பேட்டியில் டி. சோமசுந்தரம் விளக்குகிறார்.

சந்திப்பு - மதன்

வடக்கிலும், கிழக்கிலும் கடந்த சில ஆண்டுகளாக நடைபெற்றுவரும் போரினாலும் மற்றும் நெருக்கடியான சூழ்நிலையினாலும் பாதிப்புறும் மக்களுக்கு ஒரு தேவை உண்டு. இந்தத் தேவையானது பூரணமாகப் பூர்த்தி செய்யப்படவில்லை. பாதிப்புறும் மக்களின் மனநலத்தைக் கவனிக்க உளவளத்துணை நிலையங்கள் போதியளவு இல்லை. சமூகத்தின் விழிப்புணர்வும் குறைவாகவே காணப்படுகின்றது. உளரீதியாகப் பாதிப்புற்றவர்கள் உடல்ரீதியாகவே மெய்ப்படுத்துகிறார்கள். ஆனால் மருத்துவ பரிசோதனைகளின் போது மெய்ப்பாடுகள். (Physical Pains) எதுவும் தென்படாது. இந்த நிலையில் இவர்களை நெறிப்படுத்துவதும், எங்கு அனுப்புவது என்பதும் பெரும் சங்கடமாகவே இருக்கிறது இவர்களை மனநோய் ஆஸ்பத்திரிக்கு அனுப்புவது பயன் பொருத்தமற்றது என்கிறார் யாழ். போதனாவைத்தியசாலை உளமருத்துவ ஆலோசகர் டாக்டர் டி.சோமசுந்தரம்.

யாழ். போதனா வைத்தியசாலையில் வெளி நோயாளர் சிகிச்சைப் பிரிவுக்கு உடல்ரீதியான அறிகுறிகளுக்குச் சிகிச்சை பெறவிரும்பி வருகிறவர்களில் 30 சத விகிதத்தினர் உளப்பிரச்சினை உடையவர்கள் என்பதை அண்மையில் நாம் மேற் கொண்ட ஆய்வொன்றிலிருந்து தெரிந்து கொள்ள உதவியாக இருந்தது என்றார் அவர்.

உள வள சேவையைப் பற்றிக் கேட்டதற்கு மனித நல சேவையில் கரிசனை உடையவரும், போர்க்காலப் பழக்க வழக்கங்களுடன் வெகுவாக ஒன்றிப் போனவருமான பிரித்தானியாவைச் சேர்ந்த டாக்டர் அன்னா டோனி 1984-இல் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தார், அதன்பிறகு-யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெருவில் உள வள நிலையம் ஒன்று உருவாகியது எதிர்கால நம்பிக்கையூட்டும் பணியில் முதலில் சேவைக்கு உதவியவர்கள் இருவர். ஒருவர் டாக்டர் நச்சினார்க்கினியர். மற்றவர் டாக்டர் கணேசமூர்த்தி என்றார்.

எமது குறிக்கோளின் ஒரு கட்டமாக பல்கலைக்கழக மருத்துவ மாணவர்களுக்கு உள வளத் துணைப் பயிற்சி வழங்கப்பட்டது. இப்போது மருத்துவ மாணவர் உட்படப் பலதுறை சார்ந்தவர்களும் பயிற்சியைப் பெறுகிறார்கள்; தொண்டர்களுக்கான உள வளத் துணைப்பயிற்சி அருட்திரு செல்வரெத்தினம் அடிகளாரின் மேற்பார்வையில் நடைபெறுகிறது இவர் இத்துறையில் கலாநிதிப்பட்டம் பெற்றவர் ஆவர். உளவளத்துணை நிலையங்களைஏனைய மாவட்டங்களிலும் விஸ்தரிக்கத்திட்டமிட்டிருந்தது; ஆனால் சூழ்நிலை காரணமாக விஸ்தரிக்க முடியவில்லை. இருந்தும் இராணுவத்தினரால் ஆக்ரோஷமாகத் தாக்கப்பட்டவர்கள் சிலருக்கு1988-ல் வவுனியாவிலும் தொடர்ந்தாற் போல் மன்னாரிலும் உளவளத்துணை வழங்கினோம். பெறுபேறுகள் நம்பிக்கை யூட்டுவதாக அமைந்தன என்று குறிப்பிட்டார்.

### பாதிப்பும் பராமரிப்பும்

நெருக்கடியான யுத்த சூழ்நிலையால் பாதிப்படைந்தோர்களில் கணிசமானோருக்கு உளவளத்துணையே மிகவும்பொருத்தமான பராமரிப்பாகும். ஏனெனில் அவர்களுக்கு ஏற்படும் அதிர்ச்சிதரும் அனுபவத்தை மனதார முழுமையாக கிரகித்து ஊடகப்படுத்தி அர்த்தம் கற்பித்து மனதால் பூரணமாக ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு உளவளத்துணை உதவும். உணர்வுப்பாதிப்புக்கு முக்கியகாரணமாக உள்ளவை- நெருங்கிய உறவினர்கள் பற்றியதான துன்பமான தகவல்கள், உணர்வுகள் (Emotions) உணர்ச்சிகள் (Feelings) அடக்கி ஒடுக்கப் படுவதால் ஏற்படும் கவலைகள்-இலைநித்திரையின்மை, உறவுச் சிக்கல்கள் மற்றும் மெய்ப்பாட்டு அறிகுறிகளாக வெளிப்படும் என்றார் டாக்டர் சோமசுந்தரம்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

காதல், திருமணம், தற்கொலை முயற்சிகள், மன முறிவு, மது, போதைவஸ்து துர்ப்பாவனை, பாலியல் சிக்கல்கள், உறவுச் சிக்கல்கள் தொடர்பாகவும் உளவளத்துணை அவசியமாகின்றது.

1988இல் பேராசிரியர் கணேஸ்வரன் செய்த ஆய்வொன்றின்படி யாழ். குடாநாட்டில் தற்கொலை விகிதம் உலகிலேயே முதலிடம் வகிக்கிறது என்றார்.

தற்கொலை பற்றி மேலும் விபரித்த டாக்டர், போர்க்கால சூழ்நிலையில், பொதுவாகப் போர்க்காலத்தில் தற்கொலை முயற்சிகள் குறைவாகவே காணப்படுகின்றன. இப்போது யாழ்ப்பாணத்தில் தற்கொலை முயற்சிகள் படிப்படியாகக் குறைந்தே காணப்படுகின்றன; ஐரோப்பாவில் முதலாவது, இரண்டாவது உலக யுத்தங்களின்போது தற்கொலை அல்லது தற்கொலை முயற்சிகள் குறைவாகவே காணப்பட்டன. சுதந்திரத்துக்காகப்போராடும் வடஅயர்லாந்திலும் இந்த நிலைதான். போர்க்காலங்களில் இன, மொழி, கலாசார, நாட்டு உணர்வுகளே மேலைப்பாகின்றன. சமூகத்துக்கு உதவவேண்டும் என்ற மனப்போக்கு வளர்கிறது தன்நம்பிக்கை, தற்குறி அக்கறை சுய அடையாளம் (Social self esteem) மக்கள் மத்தியில் ஏற்படுகிறது. இது ஒரு பெரும் மாற்றமாகும். இது சரியாக வழிப்படுத்தப்பட வேண்டியதாகும் என்று கூறினார்.

### மாணவர்களைத் தாக்கக்கூடிய நெருக்கீடுகள்

அதிர்ச்சியையும், மனக்குழப்பத்தையும்உண்டாக்கும் அசாதாரண நிகழ்வுகளையே 'நெருக்கீடுகள்' என்கிறேன். பெரியோர்களைவிடச் சிறார்களில் இத்தாக்கங்கள் குறைவாகக் காணப்படுகின்றன. கபடமற்ற அப்பாவித்தன்மை, நிகழ்வுகளை முற்றாகப்புரிந்து கொள்ளாமை போன்ற குணாதிசயங்களால் நெருக்கீடுகளைச் சுலபமாகவும், விளையாட்டுத்தனமாகவும் எதிர்கொள்வர். ஆனால், கல்லூரி மாணவர்களைப் பொறுத்தவரையில் நெருக்கீடுகளால் மாணவர்களுக்கு உளப் பாதிப்பு ஏற்படுகிறது. வன்முறைகளை நேரடியாக அனுபவித்தல் - விமானக் குண்டு வீச்சு, எறிகணைத் தாக்குதல், இராணுவம் தேடி அழிக்கும் நடவடிக்கைகள், சுற்றிவளைப்பு, சித்திரவதை, உயிருக்கு அச்சுறுத்தல் மற்றும் தனது வீடு, கல்வி நிறுவனங்களின் அழிவு இத்தியாதி சம்பவங்களை அனுபவித்தல் மாணவர் மத்தியில் நெருக்கடிகளை ஏற்படுத்தக்கூடிய காரணிகளாகும்.

(6ம் பக்கம் பார்க்க)

## விழுதுகள்...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஓட்டை. ஆமியின்ர சூடு மழைக்கை அதலதான் புடிச்சிருந்தது எண்டு சாள்ளான் சூட்டி' என்று கூறினர்.

குட்டியைப்பற்றி இன்னுமொரு போராளி கூறுகையில் 'கட்டுக்குள்ள இருந்த எங்கட முகாமுக்கு கிட்ட ஒரு தனியன்யானை திரிஞ்சுது. அந்த யானையைச் சுடக்கூடாது எண்டு எங்களுக்கு உத்தரவு. ஏனெண்டா பக்கத்திலை முகாம் இருக்கிறதெண்டு இந்தியன் ஆமிக்குத் தெரிஞ்சு போகும். ஒரு நாள் இவன் வந்த வழியில யானை; அது இவனைத் தூக்கி போட்டு உழக்கினது. நல்லவேளை ரண்டு காலுக்கு மிடையில சறுக்கில உழக்கின படியால தப்பியிட்டான், என்றார்.

இவனது சிந்தனையில் போராட்டமும், இயக்கமுமே நிறைந்திருப்பதால் இவன் வீட்டைப்பற்றிச் சிந்திப்பதில்லை. 1986ம் ஆண்டு இயக்கத்தில் முழுநேரமாக இணைந்து கொண்ட பின்னர் 1987ஆம் ஆண்டு இலங்கை-இந்திய ஒப்பந்தம் ஏற்பட்ட காலத்திலேயே வீட்டிற்குப் போனான். இவன் போனான் என்பதை விட சுகவீனமுற்றிருந்த இவன் வலுக்கட்டாயமாக வீட்டுக்குக் கொண்டு போய் இறக்கப்பட்டான் என்பதே பொருந்தும். அப்படியிருந்தும் சில நாட்களிலேயே முகாமுக்குத் திரும்பிவிட்டான்.

1985ஆம் ஆண்டு இயக்கத்துடன் தொடர்பு ஏற்பட்ட பின்னர் இவன் தன்னை முழுநேர உறுப்பினராக இணைத்துக் கொள்ளும்படி கேட்டுக்கொண்டிருந்தான். ஏற்கனவே இவனது அண்ணா இயக்கத்தில் இணைந்து வேலை செய்து கொண்டிருந்தார். தன்னை முழுநேர உறுப்பினராக இணைக்கும்படி அவரிடம் இவன் வேண்டுகோள் விடுத்தபோது அடுத்த முகாமில் பயிற்சி பெற அனுப்பலாம் என அவர் கருதினார். அதற்கிடையிலேயே எப்படியோ இவன் இயக்கத்துடன் இணைந்து கொண்டான். பயிற்சி முடிந்ததும் போர்க்களத்துக்கு செல்வதற்கு என்னென்ன முயற்சிகள் செய்ய வேண்டுமோ அத்தனையும் செய்தான். நாவற்குழி முகாமிலிருந்து வெளியேற முனையும் சிறிலங்கா இராணுவத்தினரின் நடவடிக்கைகளை முறியடிக்கும் பணியை மேற்கொள்ள அனுப்பி வைக்கப்பட்ட போராளிகளில் இவனும் ஒருவன். அங்கு தனது முழுமையான உழைப்பையும், ஆற்றலையும் இவன் நிரூபித்தமையால் தொழில்நுட்பப் பயிற்சி பெற தேர்ந்தெடுக்கப்பட்டான். அப்பயிற்சியின் பின்னாளில் இவன் செய்த சாதனைகளுக்கு உறுதுணையாக இருந்தன.

போராளிகளுக்கு அரசியல் அறிவை ஊட்டுவதிலும் இவன் கணிசமான பங்கை ஆற்றியிருந்தான். காட்டிலிருந்து றோணியோ பிரதிமூலம் வெளிவந்த உணர்வு பத்திரிகையில் இவனது சிந்தனையில் உதித்த கேலிச் சித்திரங்கள் வெளிவந்தன. போர்க்களத்திலும் இவன் அப்படித்தான். போராளிகளை ஊக்குவிக்கும்போது இவனது கருத்துக்கள் அவர்கள் மனதில் ஆழமாகப் பதியும்.

கட்டைக்காட்டு மோதலில் தரையிறங்க முனையும் இராணுவத்தினருக்கு எதிரான யுத்தத்தை மேற்கொள்ளும் பொறுப்பு இவனிடமே ஒப்படைக்கப்பட்டிருந்தது.

இரவிரவாக ஒவ்வொரு காப்பரண்களுக்கும் செல்லுவான். விழிப்புடனும் உற்சாகத்துடனும் இருக்குமாறு ஊக்குவிப்பான். 'நாங்கள் புலிகள். எந்த நேரமும்சாவை முதுகிலே கட்டிக்கொண்டு திரிகிறனாங்கள். எங்களை நம்பித்தான் ஆனையிறவில இத்தனை போராளிகளும் போராடிக்கொண்டு இருக்கினம். எங்கட சிநேகிதர்களை இழந்து நாங்கள் கவலையோட திரும்பலாம். ஆனால் சண்டை பிடிக்காமல் ஆமியை வரவிட்டிட்டாங்கள் எண்ட அவமானம்மட்டும்வரக் கூடாது. ஆமி வாறதெண்டா எங்கட பிரேதத்துக்கு மேலாலதான் வரவேணும். அதோட நாங்கள் கண்டமாதிரிச் சண்டைபிடிக்கக்கூடாது நாங்கள் போராளிகள். எங்களிட்டை ரவைகள் குறைவா இருக்குது. ஒவ்வொருத்தரா நிதானமாப் பார்த்துத்தான் சுடவேணும். பதற்றப்படக் கூடாது' என்றெல்லாம் அறிவுறுத்தினான். அத்துடன் விடுதலைப் புலிகளின் தளபதிகளுக்கே உரிய முறையில் 'நான்தான் முன்னுக்கு நிற்பன் நான் அடிச்சாப்பிறகு நீங்கள் அடிக்கலாம்' என்றான்.

தனது மரணத்தை உணர்ந்ததுபோல எனவோ குட்டி இறுதிநாட்களில் கூறிய வார்த்தைகள் அவனுடன் பழகியவர்களுக்கு கண்ணீரை வரவழைக்கின்றன. 'இந்தச் சண்டையில செத்தா எனக்கு கடற்கரையில சமாதியெழுப்ப வேணும் மச்சான்' இது தனது நண்பனொருவனிடம் இவன் கூறிய கூற்று. "இந்தப் போட்டோவைத்தான் போஸ்டருக்கும் புளொக்குக்கும் பாவிக்கவேணும்" தனது போட்டோவை இன்னொரு நண்பனிடம் கொடுத்தபோது இவன் கூறிய கூற்று இது.

'நான் செத்தாப் பிறகு என்ரை றைபிளை எடுத்து நீ சண்டைபிடி' தன்னுடன் கூடவே திரிந்த இளந்திரையன் என்ற போராளி தானும் சண்டைபிடிப்பதற்காக றைபிள் கேட்டபோது கூறிய வார்த்தைகள் இவை. அவனது ஆர்வத்தைக் கட்டுப்படுத்த இவன் கூறிய வார்த்தைகள்தான் இவையென்றாலும் கூடவே நின்ற அந்தப் போராளியால் இக்கூற்றை நினைக்கும்போது...

அந்தப் போர் மிகப் பயங்கரமானது. கடலில் அணியாகத் திரண்டுவந்த கடற்படைப் படகு ஒன்று நீரில் மூழ்கியது. இன்னொன்றை கடற்படையினர் கட்டிஇழுத்துக்கொண்டு சென்றனர். விமானங்கள் குண்டுமழை பொழிந்தன கடலிலிருந்தும் ஷெல்கள் ஏவப்பட்டன. இதைப்பற்றி இளந்திரையன் குறிப்பிடும்போது "அந்த இடம் ஒரே மணற்பகுதி. முன்னுக்கும் பின்னுக்கும் ஷெல் விழுந்துகொண்டேயிருந்தது. ஷெல் முழு நிலம் அதிர்ந்து பங்கருக்குள்ள மண் கொட்டுப்பட்டுக் கொண்டிருந்தது. சிலநேரம் மண்மூட்டைவே உள்ளுக்கை விழுந்தது. அதைத் திருப்பித் தூக்கிப்போட்டுச் சண்டை பிடிக்கவேணும். எங்களுக்குப் பக்கத்தில இப்பிடி பங்கர் மூடுபட்டு மூண்டுபேர் செத்துப் போச்சினம். தென்னை மரங்களெல்லாம் முறிஞ்சு

(2ஆம் பக்கம் பார்க்க)

## மறக்க முடியாத நாட்கள்!

ஓ வீரனே!
உன்னோடு திரிந்த நாட்கள்
மறக்க முடியாத நாட்கள்
ஆகிவிட்டன
உன் இறப்பு
என்னை கவலையில் தான்
ஆழ்த்தியுள்ளது
இருப்பினும்
நீ
தமிழீழத்துக்கு உரமானதையிட்டு
சந்தோசத்தில ஆழ்த்தியுள்ளது
உன இறப்பு
பல புதிய ஜனனங்களை
உருவாக்கவல்லது!
உன உயிர்
எம்மால் காக்க முடியாமல் போனாலும்
உன் ஆயுதம்
எந்நாளும் காக்கப்படும்
ஏனெனில்!.........
தமிழீழத்தை மீட்கும் பெரும் பங்கு
அதற்கு உண்டு
வீரனே உன் மரணம்
தமிழீழத்தின் உதயம்!

-இளந்திரையன்

(போர்க்களத்தில் குட்டியுடன் கூடவேயிருந்த சின்னஞ்சிறு போராளி இளந்திரையன் எழுதிய கவிதைகளில் ஒன்று இது. அவனது மனக்கிடக்கையை இறக்கி வைத்த கவிதை வரிகளிலுள்ள உயிர்த்துடிப்பை வாசகர்கள் உணர்வதற்காக அப்படியே பிரசுரமாகிறது )

## பேரினால்...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

இடப்பெயர்வால் பாடசாலைகளை அடிக்கடி மாற்றுதல், பரீட்சை பற்றிய நிச்சயமற்ற தன்மை, கல்விக்கான பாதுகாப்புஇன்மை, சக மாணவர்கள் அயல் நாடுகளுக்கு வெளியேறுதல் முதலியனவும் மாணவர்களின் உளவளத்தைப் பாதிக்கலாம் என்று மாணவர்களின் அவலங்களை விபரித்தார்.

வகுப்பாசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் மத்தியில் காணப்படும் அசாதாரண நிலைகளை இனங்காண வேண்டும். மாணவர்களுக்கு வழிகாட்டுதல் அவசியம். நெருக்கீடு, எதிர்தாக்கங்களும் அவற்றைக் கையாளும் முறைகள் தொடர்பாக கல்வி முறைகளை ஏற்படுத்தவேண்டும் என்றார்.

மேலும் உணர்வுகளை வெளிப்படுத்தும் கற்பித்தல் முறைகளான சித்திரம், சிற்பம், களிமண் மாதிரிகள் அமைத்தல், ஊமைநாடகம், பங்கேற்று நடித்தல், கதை சொல்லுதல், எழுதுதல், சங்கீதம், விளையாட்டு ஆகியன மூலமாக தமது உணர்வுகளை வெளிப்படுத்த உதவ வேண்டும்.

வட அயர்லாந்திலும் இப்படியான வெளிப்படுத்தல் முறைகளைக் கையாள்கிறார்கள். இம் முறைகளின் மூலம் தாக்கத்தின் கடுமையைத் தணிக்க முடியும் இல்லையா? என்ற வினாவுடன் செவ்வியை முடித்துக் கொண்டார்.

## வீரவணக்கம்



**அன்ராஜ்** (இராமச்சந்திரன் சங்கர்)

வட்டுக்கண்டல் மன்னார்.


| வீரஜனனம் | வீரமரணம் |
|---|---|
| 03 - 07 - 1965 | 11 - 08 - 1991 |

மானத்தின் உச்சியிலே
மலர்ந்திருக்கும் மணிவிளக்கே
சனத்தின் இடிப்பொடிக்க
எழுந்து வந்த இடிமுழக்கே
விடுதலையின் தீயூற்றே
வீரத்தின் புயற்காற்றே
கொடுமதியார் உடல்நீரில்
குளிக்கவந்த வரிப்புலியே
தலைப்புறத்தில் குண்டேற்றாய்
தமிழ் நிலத்தின் உரமானாய்
விலையில்லா விடுதலையின்
வித்தானாய் இளம்வீரா!
மரணத்தை நீ மணந்தாய்
மானத்தின் வாழ்வுகந்தாய்
உருவத்தை நீ யிழந்தாய்
உள்ளத்தில் குடிபுகுந்தாய்!
உன்னை......
எரிக்கின்ற சிதைமேடு
எரிமலையாய் எழுந்துவரும்
நெரிக்கின்ற பகையிடத்தை
நீறாக்கத் திரண்டுவரும்
அந்தப் பொழுதினிலே
அடற்புலியே நீ வருவாய்
எந்தக் கணத்தினிலும்
எங்களிலே நீ யுறைவாய்
நெறி மிகுந்த புலிவாழும்
தமிழீழத் திரு நிலத்தில்
மறுபடியும நீ பிறப்பாய்
மனங்களிலே ஒளி விரிப்பாய்!

(B/2940) — நண்பர்கள்

## 31-ம் நாள் வீரவஞ்சலி

| வீரஜனனம் | வீரமரணம் |
|---|---|
| 17 | 17 |
| — | — |
| 03 | 07 |
| — | — |
| 1972 | 1991 |



**வீரவேங்கை ராமன்**

**(சக்திவேல் ஸ்ரீபாலகிருஷ்ணன்)**

(கட்டைக்காட்டில் தரையிறங்கிய ஸ்ரீலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடிமோதலில் வீரமரணம் அடைந்த வீரவேங்கை)

இன்று (16-8-91) அதிகாலையில் எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி வைபவத்திலும் மதியம் நடைபெறும் சபிண்டி வைபவத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

"ஸ்ரீவனம்"
திருவில் லேன், இங்ஙனம்
வல்வெட்டித்துறை. (R/1644) குடும்பத்தினர்.

# 'ஆனையிறவுப் பெரும் போரின் விளைவு'

# பொருளாதாரத்தைபின்தள்ளி சிறிலங்காவின் இராணுவ விஸ்தரிப்பு

ஆனையிறவுப் பெரும் போரைத் தொடர்ந்து சிறிலங்கா அரசாங்கம் பெரும் இராணுவ விரிவாக்கத்தில் இறங்கியுள்ளது. சிறிலங்காவின் பொருளாதார நெருக்கங்களையும், மக்களின் சுமைகளையும் பொருட்படுத்தாமல் இராணுவ விஸ்தரிப்பில் முழுக்கவனம் செலுத்தப்படுகின்றது.

### இராணுவ விஸ்தரிப்பு

சிறிலங்காவின் முன்னாள் பாதுகாப்பு இணை அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னா சிறிலங்கா இராணுவத்தை ஒரு லட்சமாக அதிகரிக்க வேண்டும் எனத் திட்டமிட்டார். ஆனால் சிறிலங்காவின் பொருளாதாரம் இடம் கொடுக்கவில்லை. இதன் காரணமாக அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னாவிற்கும் திறைசேரிக்கும் இடையில் முரண்பாடுகளும் ஏற்பட்டன. ரஞ்சன் விஜேரட்னா இதனை வெளிப்படையாகவும் காட்டிக் கொண்டார். ஆனால் அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னா இறந்ததும் இராணுவ விஸ்தரிப்பு நடவடிக்கைகள் நிதிப்பற்றாக்குறை காரணமாக நிறுத்தப்பட்டன.

**சர்வதேசப் போர்களுக்கு என்றும் தயாராக இருக்கும் சில உலக நாடுகளின் இராணுவச் செலவீட்டிற்கு ஒத்ததாக சிறிலங்காவின் இராணுவச் செலவீடும் அதிகரித்து. விட்டது 1992 இல் அதன் செலவீடு 20 வீதத்தைத் தாண்டிவிடும்.**

ஆனால், தற்பொழுது நிதிப்பற்றாக்குறை, பொருளாதார நெருக்கடி என்பனவற்றை பின்தள்ளி இராணுவ விஸ்தரிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

இதன் ஒரு கட்ட நடவடிக்கையாக அவசர அவசரமாக 20,000 பேர் மேலதிகமாக இராணுவத்திற்குச் சேர்க்கப்படுகின்றனர். இதுவரை இருபதாக இருந்த போரிடும் படையணியின் எண்ணிக்கை இருபத்தைந்தாக உயர்த்தப்படவுள்ளது.

மணல் சதுப்பு நிலங்கள் சீரற்றபாதைகள் என்பனவற்றில் வேகமாகச் செல்லக்கூடிய வாகனங்களும் கொள்வனவு செய்யப்படவுள்ளன. இதில் ரி-85 ரக டாங்கிகளும், வை. டபிள்யூ 531 ரக வாகனங்களும் அடங்குகின்றன.

அத்தோடு மேலும் நீண்ட தூரம் சுடும் பீரங்கிகளும் கொள்வனவு செய்வதில் சிறிலங்கா அரசாங்கம் அக்கறையாகவுள்ளது. 73 மி. மீ. பீரங்கிகள், 105 மி. மீ ஆர் சி.எல் ரகப் பீரங்கிகளும் அடங்குகின்றன.

மேலும்விமானப்படையைப் பலப்படுத்தும் நோக்கமாக எப்-85 ரக குண்டுவீச்சு விமானங்களையும், வை 8, வை12, விமானங்களையும் சிறிலங்கா கொள்வனவு செய்யவுள்ளது. இதன் மூலம் சிறிலங்கா விமானப்படையின் பலம் தற்போதையதைவிட நூறு வீதத்தால் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### ஆனையிறவுப் போரின் படிப்பினை

இவ்வாறான பெரும் இராணுவத் தயாரிப்பிற்கு ஆனையிறவுப் பெரும் போர் ஏற்படுத்திய தாக்கமே காரணமாகும். இப்போரினால் சிறிலங்கா இராணுவம் இதுவரை இலங்கையில் இராணுவத்திற்கும் புலிகளுக்கும் இடையில் இருந்த வலுச் சமநிலை பாதிக்கப்பட்டுவிட்டதை உணர்ந்துள்ளது. அத்தோடு இதுவரை சிறிலங்கா இராணுவத்தினரிடம் இருந்துவந்த இராணுவத் தளபாடங்களின் செயற்பாடுகள் பற்றியும் ஆனையிறவுப் போர் மீளாய்வு செய்ய வைத்துள்ளது.

ஆனையிறவுப் பெரும் போரின்போது இராணுவம் விடுதலைப் புலிகளின் மரபு வழிப்படை அணியை முதல் முதலாக நேரடியாகக் களத்தில் சந்தித்தது. இராணுவத்தின் விரைவான முன்னேற்றத்தை இப்படையணி தடுத்து நிறுத்தியது பெரும் சேதத்தையும் ஏற்படுத்தியது. இந்நிலையில் விடுதலைப் புலிகள் ஒரு கெரிலாப்படை அணியல்ல என்ற நிலை உருவாகியதால் எதிர்காலத்தில் புலிகளுடன் மோத பெருமளவு ஆட்பலம் இராணுவத்திற்குத் தேவையாகின்றது.

மேலும் சிறிலங்கா இராணுவத்தரப்பினர் இது வரை பயன்படுத்திவந்த கவச வாகனங்களின்செயற்பாடுகள்பற்றியும்மீளாய்வு செய்யப்பட்டது. சிறிலங்கா இராணுவத்தினர் பயன்படுத்திய கவச அணிகளில் பிரதானமான சலாடின், பவல் கவசவாகனங்கள் இடம்பெற்றன. ஆனையிறவுப் போரின் போது இவற்றின் செயற்பாடுகள் திருப்திகரமாக அமையவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதுவரையிலும், வீதிகளிலும் இறுக்கமான சமதரைப் பரப்புக்களிலும் கெரில்லாப் படை அணிகளுடன் போரிட உதவிய இக் கவசவாகன அணிகள் மணற்பாங்கான அல்லது சதுப்பு நிலப்பரப்புகளில் மரபுவழி இராணுவ அமைப்பொன்றுடன் மோதுவதற்கு ஏற்றவையாக அமையவில்லை என சிறிலங்கா இராணுவ வட்டாரங்களில் உணரப்பட்டது. சிறிலங்கா இராணுவத் தளபதி ஹமில்டன் வனசிங்கா இது பற்றிக் குறிப்பிடுகையில் சலாடின் கவச வாகனங்கள் மணற்பாங்கான பகுதிகளில் விரைவான நகர்ச்சிக்கு எதுவானதாக இல்லை என்றும் அதே வேளை சலாடின் கவச வாகனத்தின் சுடுதிறன் பவல் கவச வாகனத்திற்கு இல்லை எனவும் தெரிவித்தார்.

அடுத்ததாக விடுதலைப் புலிகள் ஆனையிறவுப் பெரும் போரின்போது விமான எதிர்ப்புப் பீரங்கிகளைப் பயன்படுத்தினர். இதுவரை சிறிலங்கா இராணுவத்தினருக்கு உதவி வந்த விமானப்படையின் மேலான்மை பாதிக்கப்பட்டது. விமானப்படை பெரும் தொகைக் குண்டுகளைவீசினாலும் அவை இலக்குகளைத் தாக்கும் திறனை இழந்தன. இந்நிலையில், விமானப்படையின் பலமும், தாக்குதல் திறனும் அதிகரிக்கப்பட வேண்டிய நிலை சிறிலங்கா பாதுகாப்புப் படையினருக்கு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் விடுதலைப் புலிகளுக்கு ஈடு கொடுப்பதானால் இராணுவ விஸ்தரிப்பு நடவடிக்கை மிகவும் அத்தியாவசியம் என சிறிலங்கா தரப்பு கருதுகின்றது. இதனால் பொருளாதார நெருக்கடியும் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

### சிறிலங்காவின் கடன்பளு

**பிறேசில், மெக்சிக்கோ, இந்தியா ஆகியவற்றின் கடன் தொகை அளவிற்கு சிறிலங்காவிற்கு கடன் இல்லாவிடினும் நாட்டின் அளவு, பொருளாதாரத்தின் அளவு, என்பனவற்றுடன் ஒப்பிடும் இடத்து கடன் பளு அந்நாடுகளை விடக் குறைந்ததல்ல.**

சிறிலங்கா 5.1 பில்லியன் டாலருக்கு மேற்பட்ட சர்வதேச கடன்பளுவைக் கொண்டுள்ள நாடு. ஒப்பீட்டு ரீதியில் பிறேசில், மெக்சிக்கோ, இந்தியா (மூன்று நாடுகளும் 50 பில். டாலருக்கு மேல்) ஆகியவற்றுடன் ஒப்பிடும் இடத்து குறைவானதாக இருப்பினும் நாட்டின் அளவில், பொருளாதாரத்தின் அளவிலும் அந்நாடுகளுக்குக் குறைவான கடன் சுமையில் மூழ்கியுள்ள நாடு அல்ல சிறிலங்கா. வருடாந்தம் சுமார் 1000 கோடி ரூபாவிற்கு மேல்கடனும் வட்டியும் செலுத்தவேண்டியநாடு இந்த மீளளிப்புத்தொகை அடுத்தவருடங்களில் 1600 கோடியையெட்டும்என சிறிலங்காவின் நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும் சிறிலங்காவின் இன்றைய பொருளாதாரமும் அந்நிய நாடுகளின் கடன்களிலும், உதவியிலுமே தங்கியுள்ளது. இவ்வருடம் சுமார் 3600 கோடி ரூபா உதவியாகவும் கடனாகவும் எதிர்பார்க்கப்பட்டது. இதில் பெரும் பகுதி சுமார் (2800 கோடி ரூபா) கடனாகும்.

அதேவேளை, தற்பொழுது சிறிலங்காவிற்கு கடன்வழங்கும் மேற்குலக நாடுகள் சிறிலங்காவிற்கு கடன்கள் வழங்குவதற்குச் சற்றுத் தயங்கி வருகின்றன கடந்த யூன் மாதம் நடைபெற வேண்டிய சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாடும் நடைபெறவில்லை. ஒக்டோபர் வரையும் இம் மாநாடு பின் போடப்பட்டுள்ளது.

இந்நிலையிலும், அடுத்த ஆண்டிற்குரிய பாதுகாப்புச் செலவினத்திற்கென 25,000 கோடி ரூபா ஒதுக்கப்படவுள்ளதாக சிறிலங்கா பாதுகாப்பு இணை அமைச்சர் டி. பி. விஜயதுங்கா தெரிவித்துள்ளார். அதேவேளை இந்த ஒதுக்கீட்டில் பொலிசாருக்கும் முப்படைகள் தவிர்ந்த ஏனைய பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குரிய ஒதுக்கீடுகளும் அடங்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த ஒதுக்கீடானது கடந்த வருட ஒதுக்கீட்டைவிட சுமார் இரட்டிப்பு மடங்கு அதிகமானதாகும். கடந்த வருடம் 1173 கோடி ரூபா ஒதுக்கப்பட்டது. ஆனால் பின்னர் நிறைவேற்றப்பட்ட குறைநிரப்புப் பிரேரணைகள் மூலம் இந்த ஒதுக்கீடு சுமார் 2000 கோடியைத் தாண்டிவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் அடுத்த வருடத்திற்கு 2500கோடி ரூபா முதலில் ஒதுக்கப்படினும் குறைநிரப்பு பிரேரணைகள் மூலம் அவை 4000 கோடி ரூபாவைத் தாண்டும் என்ப

(8ஆம் பக்கம் பார்க்க)

# அமெரிக்க நட்சத்திரப்போர்த்திட்டம்-உலகை மூடிய ஓர் அணுக்குடையை உருவாக்கும்

வளைகுடா யுத்தத்தின் போது ஆச்சரியத்துடன் பார்க்கப்பட்ட குறூஸ் ஏவுகணைகள் லேசர் கதிர்களால் வழிகாட்டப்படும் குண்டுகள், அதிநவீன எவ்-16 ரக விமானங்கள், எம்-1 ஏ1 கவசவாகனங்கள் என்பன கடந்த கால விளையாட்டுப் பொருள்களாக மாறப்போகின்றன.

புதிய வகை பாற் (BAT) ஏவுகணை ஒன்று 300 மைல் தூரம் பயணம்செய்யும்போது ''கண்ணில் படும்'' எல்லா கவசவாகனங்களையும் அழித்துச் செல்லும். கணனிகளால் வழிகாட்டப்படும் ஏவுகணையொன்று ஒரு ஏவுதலில் பத்துக்கு மேற்பட்ட இலக்குகளை தாக்கும்.

எதிரிகளின் ராடர் கண்களுக்குப் படாது. புதியரக எவ்-22 விமானங்கள் பறந்து சென்று இலக்குகளைத் தாக்கி மீளும். புதிய எம்-1 ஏ2 ரக கவச வாகனங்கள் எதிரிகளின் ஏவுகணைக் கண்களுக்கு சிறிதளவும் புலப்படாது.

இவை எல்லாம் அமெரிக்காவின் நவீன தொழில் நுட்ப கண்டு பிடிப்புகளின் விளைவாக 1996 இல் செயலுருப் பெறப்போகின்றன.

பிரேரணைகள், ஒப்பந்தங்கள் எவ்வளவுதான் ஏற்பட்டாலும், கெடுபிடி யுத்தம் ஓய்ந்தாலும், புதிய ஆயுதத் தயாரிப்புகள் நிறுத்தப்படப் போவதில்லை. அணுசக்தி தொடர்பான பல ஒப்பந்தங்கள் ஏற்பட்டுவிட்டன. அணு ஆயுதத்தடை ஒப்பந்தத்தில் 141 ஆவது நாடாகக் கையொப்பமிட அணு வல்லரசு சீனா தயாராகிவிட்டது.

ஆனால் உலகை மூடி ஒரு ''அணுக்குடை'' ஏற்படப் போகின்றது என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். அமெரிக்காவின் ''நட்சத்திரப் போர்'' திட்டத்தின் ஒருபகுதியாக அணுசக்தியை எரிபொருளாகப் பயன்படுத்தும் பரீட்சார்த்த முயற்சிகள் நடைபெறுகின்றன. வழமைகாய ஏவுகணையில் பயன்படும் திரவ ஐதரசன், திண்ம பெற்றோலியம் என்பவற்றிற்கு மாற்றீடாக அணுசக்தியை பயன்படுத்த ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த ஆராய்ச்சி வெற்றிபெறுமானால்குறைந்த நிறையுடைய எரிபொருள் மூலம் கூடுதல் உந்துசக்தி உடைய ஏவுகணைகளை உருவாக்க முடியும்.

நியூமெக்சிக்கோவில் உள்ள சண்டியா தேசிய ஆய்வுகூடம் இத்திட்டத்தினை செயற்படுத்தி வருகிறது. ஏற்கனவே பல பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். பென்ரகனும் இதனை மறுக்கவில்லை.

இத்திட்டம் வெற்றியளிக்குமானால் ஏவுகணைகள், யுத்த விமானங்கள் என்பன அணுசக்தியால் இயங்கப் போகின்றன. ஏற்கனவே பாதுகாப்பு மற்றுப் பிறதுறைகளுக்கான செய்மதிகள் அணுசக்தி கருவிகளைக் கொண்டுள்ளன. எனவே ஓர் 'அணுக்குடை' உருவாகப் போகின்றது என்பதில் ஐயமில்லை.

இரண்டாவது உலக யுத்தத்தின்பின் அமெரிக்காவில் மிக அதிகமான இராணுவ தளபாட தொழிற்சாலைகளும் ஆய்வுகூடங்களும், பல இராணுவத் தளங்களும் ஏற்படுத்தப்பட்டன. இவற்றில் 10 ஆய்வுகூடங்களையும் 25 இராணுவத்தளங்களையும் மூடிவிடும்படி ஜனாதிபதி ஆணைக்குழு சிபார்சு செய்துள்ளது. இதனால் 37,000 தொழிலாளர் வேலை இழப்பர். பல இராணுவத்தினரும் வேலைஇழக்க வேண்டி ஏற்படும்.

நவீனபோர்க்கருவிகள்பெருமளவில் பெருகிவிட்டதால் மேலும் பல அரச, தனியார் தொழிற்சாலைகள் மூடப்பட வேண்டிஏற்படும். இதன்மூலம் 1.5 மில்லியன் அனுபவம் வாய்ந்த தொழிலாளர்களும், நிபுணர்களும் வேலை நீக்கம் செய்யப்படுவர்.

படைக்குறைப்பு மற்றும் ஏற்கனவே அளவுக்கு அதிகமான தளபாடங்களை இராணுவம் கொண்டிருப்பதால் தயாரிக்கப்பட்ட கருவிகள் பெருமளவில் தேங்கிப்போய் உள்ளன. தயாரிக்கப்படப் போகும் அதி நவீன போர்க் கருவிகள் குறைந்த அளவே பாவனைக்கு போதுமானவை ஆகும். கையாளுவதற்கு மிகக் குறைந்த மனித வலு போதுமானதுமாகும். இக்காரணிகள் மேலும் ஆட்குறைப்பை ஊக்கப்படுத்தும்.

குறித்த சில தொழிற்சாலைகள் பழைய உற்பத்திகளை நிறுத்தி புதிய தயாரிப்புகளில் ஈடுபட உள்ளன. பல மூடப்பட உள்ளன.

தொழிற்சாலைகளை மூடுவது, வேலையில்லாத் திண்டாட்டத்தினால் புஷ் நிர்வாகத்திற்கு பாதிப்புகளை ஏற்படுத்தும். அத்துடன் இன்னுமொரு பிரச்சினையுமுள்ளது. இவ்வாறான தொழிற்சாலைகளை திடீரென கட்டியெழுப்ப முடியாது அத்துடன் அனுபவம் வாய்ந்த தொழிலாளர்களை ''வெளியே'' விடுவது பல பாதிப்புகளை ஏற்படுத்தும். அவர்களை எதிர்காலத்தில் மீளப் பெறுவது கடினம்.

எனவே தொழிற்சாலைகளைப் முற்றாக மூடாது, இராணுவ தயாரிப்புக்குப் பயன்படும் மூலப்பொருள்களை பாவித்து பொதுமக்களுக்குப் பயன்படும் பொருள்களை தயாரிப்பதில் ஊக்கம் கொடுப்பதென அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

அதாவது ஏதாவதொரு வகையில் இத்தொழிற்சாலைகள் இயங்கும். அத்துடன் 'கழித்துக் கட்டப்படும்' இராணுவ தளபாடங்கள் மத்திய கிழக்கு, மற்றும் மூன்றாம் உலக நாடுகளுக்கு விற்கப்படும். அதனால் உலக ஆயுத பாவனை அதிகரிக்கப்படும் என்பதாகும்.

வேலவன்

## கூட்டுறவுச் சங்க தலைவர்கள் கூட்டம்

[யாழ்ப்பாணம்]

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்களுக்கான கூட்டம் ஒன்று நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மாவட்டக் காரியாலயத்தில் (கோண்டாவில்) நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு சங்கத் தலைவர்களை தவறாது சமுகம் கொடுக்கும்படி யாழ். மாவட்ட கூட்டுறவுப் பகுதியினர் கேட்டுக்கொள்கின்றனர்.

# கச்சதீவிற்காக போராடவும் ஜெயலலிதா தயாராம்

(சென்னை)

இலங்கைப் போராளிகளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளினால் தமிழக மீனவர்கள் சிலர் சிரமங்களுக்கு ஆளாகியுள்ளார்கள் என்று நேற்றுச் சென்னையில் இந்திய சுதந்திர தினக் கொண்டாட்டத்தில் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா பேசினார்.

இதற்கான பரிகாரங்களைச் சுட்டிக் காட்டிய அவர், இராமேஸ்வர மீனவர்களின் பாதிப்புக்கு அடிப்படைக் காரணமாக இருப்பது, நம்மிடமிருந்த கச்சதீவு இலங்கைக்கு தாரை வார்த்துக் கொடுத்தது என்றும், அதனைத் திரும்பவும் பெற மத்திய அரசிடம் தமிழக அரசு வற்புறுத்தும் என்றும் குறிப்பிட்டார். தேவை ஏற்படின் இதற்காகப் போராடவும் தயார் என்றார்.

தமிழகத்தில் அமைதிக்குப் பங்கம் விளைவித்ததோடு, பாரத பாதுகாப்புக்குச் சவால் விடும் வகையில் அமைந்த வெளிநாட்டுத் தீவிரவாதிகளின் நடவடிக்கைகளைத் தமிழகப் பொலிஸார் அடக்கினர் அதற்காக அந்தத் துறையைப் பாராட்டுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பொது மக்களுடனும் அப்பாவி மக்களுடனும் திட்டமிட்டுக் கலந்து. எமது மாநில அமைதியையே திட்டமிட்டுக் குலைத்த வெளிநாட்டுக் கூட்டத்தினரின் நடமாட்டத்தைப் பொலிசார் தனித்தன்மையுடன் கட்டுப்படுத்துவதற்கு அரசு அவர்களது கைகளைக் கட்டிப்போடாமல் சுதந்திரமாக செயற்பட வைத்தது ஒரு காரணம் என்றார் முதலமைச்சர் ஜெயலலிதா

## புதுப்பிக்கத் தேவையில்லை

(யாழ்ப்பாணம்)

வடபகுதியை விட்டு வெளியே செல்வதற்காக 20-06-91இலிருந்து 14-07-91 வரை போக்குவரத்து கண்காணிப்பு பிரிவினால் வழங்கப்பட்ட தற்காலிக அனுமதி அட்டைகள் எதிர்வரும் 20-08-91 வரை செல்லுபடியாகும். இவற்றை மீளப் புதுப்பிக்கத் தேவையில்லை என போக்குவரத்து கண்காணிப்பு பிரிவு அறிவித்துள்ளது.

## "தராசு" அலுவலகத்தினுள் இருவர் கொலை

தமிழகத்தில் இருந்து வெளி வரும் வார இதழான 'தராசு' அலுவலகத்திற்கு இருபது பேரைக்கொண்ட கும்பல் ஒன்று உள்ளே நுழைந்து இரண்டு பேரைக் கொலை செய்துவிட்டு தப்பி விட்டதாக சென்னை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு நடந்த இச்சம்பவத்தின்போது இருபதுபேர், 'ஓட்டோரிக்ஷா' வில் வந்து இந்தக் கொலையைச் செய்ததாகவும் இவர்கள் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் என்றும் சென்னைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதே நேரம் 'தராசு' பத்திரிகை ஆசிரியர் ஷியாம் கருத்துத் தெரிவிக்கையில் ''தாக்கவந்தவர்கள் குடிபோதையில் இருக்கவில்லை என்பதால் அவர்கள் உள்ளூர்க்காரர்களாக இருக்கமாட்டார்கள் என்றும் வெளியூர்க்காரர்கள்'' என்றும் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் நடந்த போது 'தராசு' காரியாலயம் அமைந்த கட்டடத்தின் ஒரு பகுதியில் தங்கியிருந்த சந்திரஹாசனுக்கு காவல் நின்ற மூன்று பொலிஸார் இதனை கவனத்தில் கொள்ளவில்லை எனவும், சம்பவம் நடந்த இடத்திற்கு செல்லவில்லை என்றும் குறை கூறப்பட்டுள்ளது.

## மரண தண்டனை

(திருகோணமலை)

இயக்க உதவியாளர்களைக் காட்டிக் கொடுத்ததாலும்சிறிலங்கா இராணுவத்திற்கு பூரண ஒத்துழைப்பை வழங்கியதாலும் திருக்கோணமலையைச் சேர்ந்த அழகுராசா என்பவருக்கு கடந்த 11 ஆம் திகதி இரவு பத்துமணியளவில் மரண தண்டனை விடுதலைப் புலிகளால் வழங்கப்பட்டது.

### கடந்த அக்டோபரின் பின்

## வன்முறை இன்றியும் அகதிகள் அதிகரித்தனராம்

(கொழும்பு)

''கடந்த அக்டோபர் மாதத்திற்குப் பின்னர் நாட்டில் எதுவிதமான பயங்கரவாத அசம்பாவிதங்கள் இடம் பெறாத போதிலும், நிவாரணம் பெறும் அகதிகளின் எண்ணிக்கை எதுவித காரணமும் இன்றி அதிகரித்தது. இதனாலேயே அகதி முகாமுக்கு வெளியே வாழ்வோருக்கு, நிவாரணம் வழங்கப்படுவது நிறுத்தப்பட்டது''

இவ்வாறு சிறிலங்காவின் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் பி. தயாரத்தினா 'வட-கிழக்கில் நிவாரணம் நிறுத்தப்பட்டது ஏன்' என்ற கேள்விக்குப் பதில் அளிக்கையில் தெரிவித்தார்.

### செயற்கை அவயங்கள் பொருத்த

## காயமுற்ற ராணுவத்திற்கு 60,000 ரூபா அன்பளிப்பு

யுத்த முனையில்காயமுற்று அங்கவீனமடைந்த படையினருக்கு செயற்கை அவயங்கள் பொருத்துவதற்கென தன்கொட்டுவ சுமகே ஒட்டுத் தொழிற்சாலையினால் வழங்கப்பட்ட ரூபா 60,000 பெறுமதியான காசோலையை இராணுவத்தளபதி ஹமில்டன் வனசிங்காவிடம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தலைவர் ஹட்சன் அமரசிங்கா கையளித்தார். கொழும்பில் ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அலுவலகத்தில் நடந்த வைபவமொன்றில் கலந்து கொண்ட ஹமில்டன் வனசிங்காவிடமே இக்காசோலை வழங்கப்பட்டது.

## 4 வாரம் பொறுங்கள்

(யாழ்ப்பாணம்)

''போக்குவரத்துசேவையை ஆரம்பிப்பதற்கு நான்கு வாரங்கள் பொறுத்துக்கொள்ளுங்கள்'' என்று யாழ். அரசாங்க அதிபரிடம் கொழும்பில் உள்ள அரச உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் போக்குவரத்து சேவையை ஆரம்பிப்பதற்கு டீசலை அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படி அரச அதிபர் கேட்டபோதே மேற்படி பதில் கூறப்பட்டது.

இதனால் தற்போதைக்கு இம் மாவட்டத்தில் போக்குவரத்துசேவை ஆரம்பிக்கப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் எதுவும் இல்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (க)

### யாழ். செயலகம்

யவைகளுடன் பாதிக்கப்பட்ட பொது மக்கள் ஆகியோர் கலந்து கொள்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இம்மறியல் போராட்டத்தை ஒருங்கிணைப்புக்குழு ஒழுங்கு செய்துள்ளது. (க)

### ஆனையிறவு

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

தில் சந்தேகமில்லை.

அதாவது 1972 ஆம் ஆண்டில் செலவீட்டில் 3.1 வீதமாக இருந்த பாதுகாப்புச் செலவினம் 1988 இல் 9.6 வீதமாகவும், 1991 இல் 12.7 வீதமாகவும் அதிகரித்திருந்தது. அடுத்த வருடத்தில் இச்செலவீடு 20%த்தையும் தாண்டியதாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இது சர்வதேச ரீதியில் போர்களில் ஈடுபடும் நாடுகளின் யுத்தச் செலவீனங்களுக்கு ஒப்பானதாகும். எப்பொழுதும் தனது இராணுவ விஸ்தரிப்பில் கண்ணும் கருத்துமாக இருக்கும் இஸ்ரேலின் இராணுவச்செலவீடும் 20 வீதத்திற்கும் 25 வீதத்திற்கும் - இடைப்பட்டதென்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறாகப்பெரும் பொருளாதார நெருக்கடியிலும் பெரும் செலவினத்திலும் இராணுவத்தை ஸ்தரிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை ஆனையிறவுப் பெரும் போர் சிறிலங்காவிற்கு ஏற்படுத்தியுள்ளது.

1987 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தைக் காப்பாற்ற 500 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்ய முடியாமல் வடமராட்சியில் ஒப்பரேசன் லிபரேசனைச் செய்த சிறிலங்கா அரசாங்கம் தற்பொழுது நாட்டின் வளங்கள் யாவற்றையும் யுத்தச் செலவீட்டில் ஈடுபடுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

சிறிலங்காவின் பௌத்த பேரினவாதச் சிந்தனையால் ஏற்பட்டுள்ள இவ் இராணுவச் செலவீடுகள் சிறிலங்காவை மீட்கமுடியாத பொருளாதார நெருக்கடியில் சிக்க வைக்கும் என்பதில் ஐயமில்லை.

- ஜெயா

### அரச

மேற்படி நிவாரண விநியோகத்தை தொடர்ந்தும் வழங்கும்படி கோரிக்கை விடுத்தனர். அத்துடன் யாழ். அரசாங்க அதிபர் திரு மாணிக்கவாசகரும் வேறும் சில மாவட்டங்களின் அரச அதிகாரிகள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களும் சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டுநிலைமைகளை விளக்கி கூறியும் மேற்படி முடிவில் மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு பிரேமதாசா மறுத்துவிட்டார்.

**மீள் பரிசீலனைக்கு:**

யாழ். அரச அதிபர் திரு. மாணிக்கவாசகர் கடந்த வாரம் ஜனதிபதியைச் சந்தித்ததையடுத்து பிரதம மந்திரி தலைமையிலான ஒரு அவசர மாநாடு கடந்த புதன் கிழமை கூடியது. இம்மநாட்டில் சகல நிலைமைகளும் விரிவாக ஆராயப்பட்டன. இறுதியில் இடம் பெயர்ந்து முகாம்களுக்கு வெளியில் இருப்பவர்களது நிவாரணம் தொடர்பாக மீள்பரிசீலனை செய்வதாக தீர்மானிக்கப்பட்டது.

**மீண்டும் உணவு முத்திரை**

இராணுவ நடவடிக்கைகளால் தொழில் இழந்தவர்கள் மற்றும் தொழில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மீண்டும் உணவு முத்திரைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனினும் தற்போது இருக்கும் 5ஆம் தொடர் உணவு முத்திரைகள் செல்லுபடியற்றவை, இதற்குப் பதிலாக 6ஆம் தொடர் உணவு முத்திரைகள் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட பின்பே இது நடைமுறைக்கு வரும். (க)

### நிவாரண

செயலக உதவி அரச அதிபரிடமும் மற்றும் அந்தந்த பிரிவு உதவி அரசாங்க அதிபர்களிடமும் மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

இந்த ஊர்வலத்தின் போது அதில் கலந்து கொண்டவர்கள் பனங்காய், பப்பாசிக்காய், மரவள்ளிக்கிழங்கு, என்பனவற்றைக் கையில் கொண்டு சென்றனர்

இவ் ஊர்வலத்தில்; இராணுவ நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்து. இராணுவ முகாம்களை இம்மண்ணிலிருந்து அகற்று, பொருளாதார தடையால் பாதிக்கப்படுவது அப்பாவி மக்களே, கொழும்பு நகரில் வர்த்தக வலையம்- முல்லைநகரில் இராணுவ வலையம், பேருக்கு உணவுக் கப்பல் அதில் போருக்கு ஆட்குவிப்பு, தெற்கு மாணவர் மாடியிலே வடக்கு மாணவர் பதுங்குகுழியிலே எனக் கோஷங்கள் எழுப்பப்பட்டன. (58)

### சிங்கள

மங்கள் மகாவலி 'பி' வலயத்தில் உள்ளடக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களாகும் என்றும் கூறப்படுகிறது.

மேலும் சிங்களக் குடியேற்ற வாசிகளின் பாதுகாப்புக்காகவும் குடியேற்றவாசிகள் எதுவிதபயமும் இன்றிவாழ்வதற்கு ஏதுவாகவும் மினிமுகாம்கள் அமைக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பாதுகாப்பு நிலைமைகள் குறித்து மகாவலி அபிவிருத்தி அமைச்சர் டபிள்யு. எச்.எம்.ஏ. லொக்கு பண்டாரவும், காணிப்பங்கீட்டு அமைச்சர் அசோக வடிகமங்காவும் அண்மையில் சென்று பார்வையிட்டு குடியேற்ற வாசிகளுடன் கலந்துரையாடியதாக கொழும்பு பத்திரிகைகள் குறிப்பிட்டுள்ளன.

### இந்துவின்

கையில் கூறப்பட்டுள்ளது.

இந்த மாதம் 4 ஆம் திகதி பிரட்மன் தனிப்பட்ட முறையில் லண்டன் சென்றுள்ளார் என்றும்' கிட்டுவையோ திலகரையோ, லண்டனிலோ அல்லது பாரிஸிலோ சந்திக்க மாட்டார் என்றும் அவருக்கு பேச அதிகாரம் அளிக்கப்படவும் இல்லை என்று ஜனாதிபதி செயலக அறிக்கை தெரிவிக்கிறது.

இதே நேரம் ஐலண்ட் பத்திரிகையும் நேற்று 'இந்து' நாளிதழை மேற்கோள்காட்டி இச்செய்தியை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### குடியிருப்போர்

மேலும் இவ்வாறு தொங்க விடுவதுடன் இந்த குடும்பத்தினர் ஏற்கனவே தமது பெயர்களை திருக்கோணமலை தலைமை பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்திருக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது. திருமலை நகரில் வாழும் ஒவ்வொருவரது உயரம், நிறை என்பனவற்றையும் இராணுவத்தினர் இந்த பதிவின்போது கணிப்பிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. வீட்டு வாசலில் தொங்க விடப்படும் பட்டியலில் பொலிஸ் அதிகாரியும் உறுதி செய்திருக்க வேண்டும் எனவும் கூறப்பட்டது.

### வீரவணக்கம்

புதிய குடியிருப்பு, பாஷையூர்) வீரமரண மடைந்துள்ளார்

கட்டைக்காட்டுப் பகுதியில் கடந்த மாதம் இருபத்திரண்டாம் திகதி நடந்த மோதலில் கப்டன்அரசன் (சோமசுந்தரம் யோகேந்திரன், நடுத்தெரு ஒழுங்கை, கண்டி வீதி, அரியாலை) என்பவர் வீரமரணமடைந்துள்ளார்.

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கத்தைதெரிவித்துக் கொண்டுள்ளனர்.

### நிவாரணத்தை

புனர்வாழ்வு அமைச்சர், அத்தியாவசிய சேவைகள் நாயகம் ஆகியோருடன் நேரடியாக பேச்சு வார்த்தை நடாத்தியுள்ளன (க)

### வசதிகள்

மேற்படி இணையத்தின் விசேட பொதுக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட இத்தீர்மானம் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மொத்தம் 8,700 குடும்பங்களைச் சேர்ந்த 3,48,000 பேர் முகாம்களில் தங்கியுள்ளனர். மற்றவர்கள் மேலான வசதிவாய்ப்புகள் இருப்பதால் வெளியில் தங்கியிருக்கிறார்கள். என்பதில்லை முகாம்களை விஸ்தரித்து நடத்த வசதியில்லாத காரணத்தினாலே அவர்கள் வெளியில் வாழ வேண்டியுள்ளது என்று அத்தீர்மானம் மேலும் தெரிவிக்கிறது.

மனித நேய அடிப்படையில் இதில் தலையிட்டு, முன்னைய பணிப்புரையை ரத்துச் செய்வதோடு மீளவும் உலர் உணவு வழங்கும் வகையில் உத்தரவு பிறப்பிக்குமாறு அத் தீர்மானம் ஜனாதிபதியைக் கோருகிறது.

### "தகவல் வங்கி"

மற்றும் சமகாலத்திற்கு உபயோகமான பல தகவல்கள் இங்கு சேகரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருக்கும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. (க)

### துண்டம்

நடந்துள்ளது. இதில் இப்பகுதியைச் சேர்ந்த அருணாசலம் கைலாயபிள்ளை (வயது 60) என்பவரே இவ்வாறு வெட்டிக்கொல்லப்பட்டவராவார்.

இச்சம்பவத்தின்போது கை. ரவீந்திரன் (வயது 20), கை. கணேசமூர்த்தி (வயது 23), கை. அற்புதமலர் (வயது 25) ஆகியோரே படுகாயமடைந்தவர்களாவர்

இரு குடும்பத்தினரிடையே இருந்துவந்த காணிப்பிரச்சினை முற்றியதனாலேயே இக்குத்து வெட்டுச் சம்பவம் நிகழ்ந்துள்ளதாகவும் இச்சம்பவத்தில் ஈடுபட்ட ஆணும் பெண்ணும் இனங்காணப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. (52)(மு)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16 ஆம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.